REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 பெப்ரவரி 20 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN




வரு. 92 இல. 44 | Tuesday 20, February, 2024 | 12பக்கங்கள் | 50/-

## மலையக தமிழர்களின் உரிமைகளை அரசாங்கம் நிலைநாட்டும் –ஜனாதிபதி





நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றிவரும் மலையக தமிழ் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை நிலைநாட்ட அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கட்சி பேதமின்றி மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் பிரதிநிதிகளையும் ஒன்றிணைத்து செயற்படுத்த எதிர்பார்க்கும் முன்மொழிவுகளை, அடுத்த மாதத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் 04

## பண்டிகை காலத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைப்பு



தமிழ், சிங்கள புது வருடத்தை முன்னிட்டு அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். டொலரின் பெறுமதி குறைந்துள்ளதால், எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளும் குறைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புது வருடத்தை முன்னிட்டு, அத்தியாவசிய பொருட்கள் பலவற்றை இறக்குமதி செய்வதற்குத் தேவையான 04

## ஐக்கிய நாடுகள் பணிப்பாளருடன் ஜனாதிபதி முக்கிய கலந்துரையாடல்



ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கூ தொங்யு நேற்று (19) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பில் கலந்து கொண்டார். ஜனாதிபதி அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. 04

# இடைக்கால தடையுத்தரவு நீக்கப்பட்டால் 35,000 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள்

## கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த



### நீதிமன்ற தடையுத்தரவால் போட்டிப் பரீட்சைகளையும் கடந்த பத்து மாதங்களாக நடத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளல் மற்றும் ஓய்வு பெற்ற மற்றும் சேவையிலிருந்து விலகிய ஆசிரியர்களுக்கான இடைவெளியை நிரப்புதல் என்பவற்றுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவு தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கப் பெற்றால் 35 000க்கும் மேற்பட்டோருக்கு ஆசிரியர் நியமனம் வழங்க முடியும் என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

இதன் மூலம் நாடளாவிய ரீதியில் ஆசிரியர் சேவையில் நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார். இச்செய்தியாளர் சந்திப்பில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவச பாடநூல்கள் சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. 04

## இலங்கையின் இறையாண்மையை பாதுகாப்பதற்கு அமெரிக்கா உதவும்



இலங்கையின் இறையாண்மையை ஆதரிப்பதற்கு அமெரிக்கா உதவுமென, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ தெரிவித்துள்ளார்.

இந்தோ பசிபிக் மூலோபாயம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "அமெரிக்க அரசாங்கம் இலங்கை இராணுவத்திற்கு விசேட படகுகளை வழங்க தீர்மானித்துள்ளது. இலங்கையின் கரையோர எல்லைகளில் கண்காணிப்பு 04

## நாகப்பட்டினம்–காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்பமாவது உறுதி



நாகப்பட்டினம் காங்கேசன்துறை கப்பல் சேவை எதிர்வரும் வாரங்களில் ஆரம்பமாகுமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரமிடையே பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் தலைமன்னார் கடற்பகுதிக்கு விஜயம் செய்த இலங்கைக்கான இந்திய தூதுவர், இரு நாடுகளுக்கிடையிலான கப்பல் சேவைகளை துரிதமாக மீள ஆரம்பிக்க 04

## சுகாதார அமைச்சுக்கு ஜப்பானின் டீசல் மானியம்



ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியின் கீழ் சுகாதார சேவையின் அம்புலன்ஸ்கள் உள்ளிட்ட போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக 40,000 மெட்ரிக் தொன் டீசல் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவித்தொகையை உத்தியோகபூர்வமாக சுகாதார 04

## மின்சாரத்தை சிக்கனமாக பாவிக்குமாறு அறிவுரை

நாட்டில் தற்போது நிலவும் வரட்சி காரணமாக நாளாந்த மின்சாரத்துக்கான தேவை 03 முதல் 04 ஜிகாவோட் வரை அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. இந்நாட்களில் நீர் மின் உற்பத்தி 21 வீதமாகக் குறைந்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த கூறியுள்ளார்.

தற்போது நீர் மின்னுற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு 83 04

## பத்தாயிரம் இந்திய வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதில் மகிழ்ச்சியே

### காணி பேர்ச்சஸ் பற்றிய விளக்கங்களும் தேவை



மலையக மக்களுக்கு வீடுகளை வழங்கும் திட்டத்தில், மேலதிகமாக அதிகரிக்கப்பட்ட பத்தாயிரம் வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை வரவேற்பதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட 04

## தாய், மகளை படுகொலை செய்த குற்றவாளிக்கு மரண தண்டனை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இரத்தினபுரி, கொட்டகெதன பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் மகளை கொலை செய்த குற்றவாளிக்கு நீதிமன்றம் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி படுகொலைச் சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த நபருக்கு இரத்தினபுரி 04

## மோட்டார் சைக்கிளுடன் ரயில் மோதி தாய், மகளுடன் மூவர் பலி

### ஆரச்சிக்கட்டுவ பகுதியில் சம்பவம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




ஆரச்சிக்கட்டுவ பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் மூவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். ஆரச்சிக்கட்டுவ மய்யாவ பகுதியில் இவ்விபத்து ஏற்பட்டது. மோட்டார் சைக்கிளுடன் ரயில் மோதி, இவ்விபத்து இடம்பெற்றது. இதில், பெண் ஒருவரும் இரண்டு குழந்தைகளும் உயிரிழந்ததாக ஆரச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர். 04



04 காமினி ஜயவிக்கிரம பெரேராவின் இறுதிக்கிரியைகள் இன்று பன்னலயில்



03 கரையோர கண்காணிப்புக்கு அமெரிக்க விமானம் அன்பளிப்பு

## சிறுமியின் கொலைக்கு நீதி கோரி மன்னாரில் ஆர்ப்பாட்டம்

### வழக்கை விசாரிக்க விசேட நீதவான்கள் குழு தேவை என்றும் வலியுறுத்தல்



தலைமன்னார் ஊர்மனை கிராமப் பகுதியில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி, நேற்று திங்கட்கிழமை (19) அமைதிப் போராட்டம் நடத்தப்பட்டது. மன்னார் நீதவான் நீதிமன்ற வளாகத்திற்கு முன்னால் அணிதிரண்ட 04

## கெஹெலியவின் உடல்நிலையை ஆராய விசேட வைத்தியர் குழு

### இம்மாதம் 26 இல் அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் உடல் நிலை குறித்து விசாரணைகளை மேற்கொள்ள ஒன்பது பேரடங்கிய விசேட வைத்திய நிபுணர்கள் குழுவை 04

## சரத்பொன்சேகாவை கட்சியிலிருந்து நீக்குவதற்கு நீதிமன்றம் தடையுத்தரவு





பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்தி கட்சி பதவிகளிலிருந்து நீக்குவதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. 14 நாட்களுக்கு அமுலாகும் வகையில் இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட 04

## உலக சாதனை படைத்த 4 மாதக் கைக்குழந்தை



இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தை சேர்ந்த கைவல்யா என்ற 4 மாதக் குழந்தை, உலக சாதனை படைத்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

இக்குழந்தை மிகச்சிறிய வயதிலேயே காய்கறி, பழங்கள், பறவைகள், புகைப்படங்கள் என 120 வெவ்வேறு பொருட்களை அடையாளம் காணும் திறனைப் பெற்றுள்ளது. இதனால், இக்குழந்தை சாதனை படைத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. 04

# நகர்வலம்



## நாடு முகங்கொடுத்த பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியினால் தீர்வு காண முடிந்துள்ளது

### மாத்தறை மாவட்ட செயலக நிகழ்வில் சாகல ரத்னாயக்க



(வெலிகம தினகரன் நிருபர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று இரண்டு வாரத்துக்குள் நாட்டில் நீதி மற்றும் சமாதானத்தை நிலைநாட்ட முடிந்ததுபோல், நாடு முகம் கொடுத்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காண அவரால் முடிந்துள்ளது. குறிப்பாக எரிபொருள், எரிவாயு மற்றும் மருந்துப் பொருட்களில் ஏற்பட்ட சிக்கல்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு சம்பந்தமான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி அலுவலக பிரதானியுமான சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம் பெற்ற 2024ஆம் வருட வரவு செலவு திட்ட யோசனைகள் சம்பந்தமாக அறிவுறுத்தல் வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தல் , மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதை கவனத்திற் கொண்டு அதற்கான முடிந்த உபகாரங்களை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த சர்வதேச மட்டத்தினூடாக வேலைத் திட்டங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்று தான் "அஸ்வெசும" வேலைத்திட்டத்தை அமுல்படுத்தியமை. மேலும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு மீண்டும் போசாக்கு பொதிகள் உட்பட முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான நிவாரண கொடுப்பனவுகளும் இன்று வழங்கப்படுகின்றன. பாடசாலை மாணவர்களின் போசணை குறைபாடுகளை கண்டறிந்து அதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவைகளை எதிர்காலங்களில் தொடர்ந்து அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதேபோல், உல்லாசத் துறையை விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது எமது நாட்டுக்கு கூடுதலான உல்லாசப் பயணிகள் வருகை தருகின்றனர். கடந்த வருடம் 14,89,000 உல்லாசப் பயணிகள் வந்துள்ளனர். இத்தொகை கடந்த வருடத்துக்கு முன்புள்ள வருடத்தை விட இரட்டிப்பாகும். எமது நாட்டுக்கு 2017ம் ஆண்டு தான் கூடுதலான உல்லாசப் பயணிகள் வந்துள்ளனர். இதன் எண்ணிக்கை 25 இலட்சமாகும். அடுத்த வருடங்களில் இதை விட பன்மடங்கு உல்லாசப் பயணிகள் வருகை தரும் நாடாக அமையும். இந்நிகழ்வில் தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலிகமகே, பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ச உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## முன்னாள் அமைச்சர் இம்தியாஸின் "மகே கதாவ" நூல் வெளியீடு

### மார்ச் 05 ஆம் திகதி கொழும்பில்

முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி இம்தியாஸ் பாக்கீர் மாக்காரினால் எழுதப்பட்டுள்ள 'மகே கதாவ' என்ற சுயசரிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் மார்ச் மாதம் 05ஆம் திகதி பி.ப 3.45 மணிக்கு கொழும்பு ஆனந்தா கல்லூரியின் குலரட்ன மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சர்வ மதத்தலைவர்கள், புத்திஜீவிகள், வெளிநாட்டு தூதுவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



## கெகுணுகொல்ல முஸ்லிம் தேசிய பாடசாலையில் கௌரவிப்பு விழா

(பூகொடை நயீம். எஸ். அமீர்)

குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கெகுணுகொல்ல முஸ்லிம் தேசிய பாடசாலையில் 2025ஆம் ஆண்டு உயர்தரம் கற்கும் மாணவர்களை கௌரவிக்கும் விழா (15) வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் ஏ.எம். இர்ஷாத் தலைமையில் வெகு சிறப்பாக இடம் பெற்றது.

பாடசாலை மாணவர்களின் பேண்ட்வாத்திய அணிவகுப்புடன் அதிபர் உட்பட ஆசிரியர் குழுவினர்கள் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன.

விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அதிபர் தமதுரையில், மாணவர்களின் சாதாரண தரப் பெறுபேறுகளைக் கண்டு மமதைகொள்ளக்கூடாது. சாதாரணதரப் பரீட்சையில் கூடிய பெறுபேறுகளைப் பெற்ற மாணவன், உயர்தரப் பரீட்சையில் குறைவான பெறுபேறுகளைப் பெறலாம். உயர் கல்வியை தொடர வந்த நாம் இன்றிலிருந்து இவைகளை மறந்து விட வேண்டும். இப்பாடசாலை தேர்ந்தெடுத்ததன் நோக்கத்தினை புரிந்துகொள்ள வேண்டும். நாம் எதிர்கால இலக்கினை நோக்கிப் பயணிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதனை அதிபர் மேலும் தெரிவித்தார்.

மேலும் அவர் உரை நிகழ்த்துகையில், மாணவர்கள், மத்தியில் ஆளுமை, கட்டுக்கோட்பாடு, ஏதும் குறைகள் இருப்பினும், அவைகளை, பொறுமையோடு சகித்துக்கொள்ளும் மனப்பக்குவத்தினை பெற்றால் மாத்திரமே நாம் கல்வி பயிலும் நோக்கத்தினை சிறப்பாக அடைந்துகொள்ளமுடியும் என்றார்.



பேருவளை இக்ரா தொழில்நுட்பக் கல்லூரியின் உள்ளக வீதிகளை புனரமைத்துத் தருமாறு கல்லூரியின் பழைய மாணவர்கள், விரிவுரையாளர்கள் நளீமிய்யா கலாபீட ஸ்தாபகர் தின நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலை சந்தித்து மகஜரொன்றை கையளித்தபோது எடுத்த படம்.

## 04 அலகுகள் நீரைப்பயன்படுத்தியமைக்கு ரூ. 75,000 மாதாந்த நீர்க்கட்டண பட்டியல் அனுப்பி வைப்பு !

### வீட்டுரிமையாளர் செய்வதறியாது திண்டாட்டம்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

தங்காலை, ஹூங்கம மெதஎலிய பிரதேச வீடொன்றில் மாதமொன்றுக்கு நான்கு அலகுகள் நீரைப் பயன்படுத்தியமைக்கு ரூ. 75,000 மாதாந்த நீர் கட்டண பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளதாக வீட்டின் உரிமையாளர் (19) தெரிவித்தார்.

இந்த நீர்ப்பட்டியல் கிடைக்கப்பெற்றதும் தான் சுய நினைவு இழந்து செய்வதறியாது காணப்பட்டதாகவும் வீட்டின் உரிமையாளர் மேலும் தெரிவித்தார். நாம் கூலித்தொழில் செய்தே சீவியம் நடத்தி வருகிறேன். அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரமே சிக்கனமாக நீரை பாவித்து வருகிறோம். கடந்த காலங்களில் மாத நீர் கட்டணமாக ஆயிரம் ரூபாவிற்கும் குறைந்த தொகையினையே பெற்று வந்தோம்.

இம்முறை மாத நீர் கட்டணமாக 75,144.24 சதம் பட்டியல் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த தொகையினை என்னால் நினைத்தும்கூட பார்க்க முடியாது.

இது தொடர்பாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு முறைப்பாடு செய்துள்ளாதாகவும் வீட்டின் உரிமையாளர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## வடக்கு சுற்றுலாத்துறை அபிவிருத்தி; கடற்படை அதிகாரியுடன் வடக்கு ஆளுநர் கலந்துரையாடல்



வடக்கு மாகாண ஆளுநர் ஏ.எம். சார்ள்ஸ் மற்றும் வடக்கு கடற்படை பிராந்திய அதிகாரி அட்மிரால் காஞ்சன பானகோடா ஆகியோருக்கிடையிலான விசேட கலந்துரையாடலொன்று நேற்று (19) ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வடக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளுதல், வடக்கு கடற்படை பிராந்தியத்தில் நிலவும் பிரச்சினைகள் என்பன தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக வடக்கிலுள்ள சுற்றுலா தளங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஆளுநர், கடற்படை அதிகாரியிடம் இதன்போது கேட்டுகொண்டார்.

## யாழில் அதிபர் நியமனத்தில் சர்ச்சை; பெற்றோர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம் குறூப் நிருபர்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு புதிதாக பெண் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று (19) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. நேற்று காலை கல்லூரிக்கு முன்பாக மாணவர்களின் கல்வி நடவடிக்கையை பாதிக்காத வகையில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 208 ஆண்டுகளைக் கடந்த பாரம்பரியமிக்க ஒரு ஆண்கள் பாடசாலையில் முதல் முறையாக பெண் அதிபரை நியமிப்பதற்கு ஆட்சேபனை செய்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். அத்தோடு கல்லூரியின் அதிபராக செயற்பட்ட



எஸ்.இந்திரகுமாரை மீண்டும் நியமிக்குமாறு மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். இப்பிரச்சினைக்கு சரியான ஒரு தீர்வை விரைவில் பெற்றுத்தருவதாக கடற்றொழில் அமைச்சரும், கல்லூரியின் பழைய மாணவருமான டக்ளஸ் தேவானந்தா உறுதி வழங்கியதாக பழைய மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தலைமன்னார் சிறுமி படுகொலை வழக்கு; சந்தேகநபருக்கு விளக்கமறியல் உத்தரவு

(மன்னார் குறூப் நிருபர்)

தலைமன்னார், ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமியொருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று உத்தரவிட்டார். தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமியொருவர் கடந்த 16 ஆம் திகதி காலை சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தோட்ட வேலைகள் செய்யும் திருகோணமலை குச்சவெளி பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய சந்தேகநபரை நீதிமன்ற உத்தரவுக்கமைய 48 மணி நேரம் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தினர். இந்நிலையில் சந்தேகநபர் நேற்றையதினம் திங்கட்கிழமை(19) பொலிஸாரினால் மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள் உயிரிழந்த சிறுமி சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் சந்தேகநபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## அங்கஜன் எம்.பியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள்



சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதனின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் தென்மராட்சிலுள்ள இரண்டு விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தாவளை இயற்றாலை விளையாட்டுக் கழகம் மற்றும் வரணி வடக்கு யாழ். ஒளி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கே இவ்வாறு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் விளையாட்டுக் கழக உறுப்பினர்களிடம் மேற்படி உதவித்திட்டத்தை கையளித்திருந்தார்.

## விபத்தில் பெண் உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பகுதியில் நேற்றையதினம் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். மண்கும்பான் 4ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த தங்கரத்தினம் தனஸ்வரி (வயது 46) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். பெண் பஸ்சில் இறங்க முற்பட்ட வேளை பஸ் சாரதி நகர்த்தியமையால் தவறி விழுந்துள்ளார். அதில் படுகாயமடைந்தவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வட மாகாண மட்ட ஓட்டப்போட்டியில் தினோஷா இரண்டாமிடம்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

வடமாகாண மட்ட ஊர்கடந்து செல்லும் மரதன் ஓட்டப்போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட உடையார்கட்டு வீராங்கனை தினோஷா இரண்டாமிடத்தைப்பெற்றுள்ளார். வவுனியாவில் வடமாகாண ஊர் கடந்து செல்லும் மரதன் ஓடப்போட்டி நடைபெற்றது. இதில் முல்லைத்தீவு உடையார்கட்டு பிரதேச உடையார்கட்டு மகா வித்தியாலய மாணவி கே. தினோஷா இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.


## தச்சன்தோப்பு வீதியில் கொட்டப்படும் கழிவுகளால் பொதுமக்கள் சிரமம்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரிப் பிரதேசசபைக்குட்பட்ட தச்சன்தோப்பு வீதியில் தொடர்ச்சியாக கொட்டப்படும் கழிவுகளால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்; ஏ9 வீதியையும் ஏ32 வீதியையும் இணைக்கின்ற தச்சன்தோப்பு வீதியை தினமும் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பயன்படுத்திவருகின்றனர்.

இந்நிலையில் இரவு வேளைகளில் இனந்தெரியாத நபர்களால் விலங்குக் கழிவுகள்,



பொலித்தீன், பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளிட்ட சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தக்கூடிய பெருமளவான கழிவுகள் வீதியில் கொட்டப்படுகின்றன. இவ்வாறு தொடர்ச்சியாக கழிவுகள் கொட்டப்படுகின்ற போதிலும் பிரதேசசபை அதனை அகற்ற முன்வராமையால் இவ்வீதி ஊடாக பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

# உள்ளூர் கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்த சுற்றுலாத் திட்டம்

## லக்சல புதிய காட்சியறைக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் அமைச்சர்



"லக்சல எல்ல" புதிய காட்சியறைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் எல்ல ரயில்வே நிலையத்தில் இடம் பெற்றது . லக்சல நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்படும் இக்கட்டடத்தின் தரைத்தளம் பொது வாகன நிறுத்துமிடமாகவும், மேல் தளம் லக்சல காட்சியறையாகவும் பிரதேசத்தில் சுற்றுலாவுக்கு ஏற்ற வகையில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இலங்கை ரயில்வே திணைக்களம், இலங்கை கைவினைப் பொருட்கள் சபை மற்றும் லக்சல ஆகியவற்றின் கூட்டு திட்டமாக இது நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இது தேசிய மற்றும் இலங்கையின் கைவினைப்பொருட்கள், மற்றும் வீடு சார்ந்த சுயதொழில் உற்பத்தியாளர்களுக்கும் புதிய சந்தையை உருவாக்கவுள்ளது . பதுளை மாவட்டம் மற்றும் ஊவா மாகாணத்தைச் சேர்ந்த உற்பத்தியாளர்களின் படைப்புகளுக்கு விசேடமாக இங்கு இடம் ஒதுக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர், அரசாங்கத்திற்குச் சொந்தமான இலங்கை ரயில்வே திணைக்களம் மற்றும் லக்சல நிறுவனம் ஆகியவை இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளன. இதன் மூலம் கிடைக்கும் இலாபத்தில் ஐந்து வீதம் ரயில்வேக்கு வழங்கப்படும். சுற்றுலாவுக்கு ஏற்ற வகையில் லக்சல காட்சியறை நிர்மாணிக்கப்படவுள்ளதால், இலட்சக்கணக்கான கைவினைஞர்களுக்குப் பிரதேசத்திலும் நாடு முழுவதும் புதிய சந்தை உருவாக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## டி.ஆர்.விஜயவர்தனவின் 138ஆவது ஜனன தினம்

### 21, 22ஆம் திகதிகளில் விசேட நிகழ்வுகள்



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் அமரர் டி.ஆர்.விஜயவர்தனவின் 138ஆவது ஜனன தினத்தையொட்டி லேக்ஹவுஸ் நிறுவனத்தில் எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் விசேட சமய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் (21) இரவு 9.00 மணிக்கு சமய அனுஷ்டான நிகழ்வு நடைபெறும்.

04

## தவக்கால சிந்தனை



### நமக்கான நாவடக்கம்

நீ என்னைதிருமணம் செய்துகொள்வாயா? எல்லாமே முடிந்துவிட்டது! எனக்கு விவாகரத்து வேண்டும்! இது ஒரு நபர் கூறும் வார்த்தைகள்.

உங்களுக்கு நான்காம் நிலை புற்றுநோய் உள்ளது! நீர் புலமைப்பரிசில் வென்றுள்ளீர்! நீ;ங்கள் நீக்கப்பட்டுள்ளீர்கள்! இவையெல்லாம் வார்த்தைகள் தான். இவ்வார்த்தைகளுக்கு வல்லமையுண்டு.

புனித யாக்கோபுவின் மடல் கூறுவது யாதெனில் தனது நாவினை கட்டுப்படுத்தக்கூடிய மனிதன் யாரோ அவன் பாவம் அற்றவனாவான். நாம் நமது வார்த்தைகளால் அடுத்தவரை உறுதிப்படுத்தலாம் அல்லது விமர்சிக்கலாம்.

நாம் உண்மையைஅல்லதுபொய்யைப் பேசலாம். நாம் ஆசீர்வதிக்கலாம் அல்லது.சபிக்கலாம். நாம் இரக்கத்தின் அல்லது கோபத்தின் வார்த்தைகளைப் பேசலாம். நாம் இறைவேண்டல் செய்யலாம் அல்லது கிசுகிசுக்கலாம். நாவின் பாவங்களின் பட்டியல்கள் இவ்வாறு பலவாகும்.

நமது வாயினைத் திறக்காமல் இத்தகைய பாவங்களைச் செய்யமுடியாது.

இன்றைய முதலாம் இறைவார்த்தையானது இறைவார்த்தையின் வல்லமையினைஎடுத்துரைக்கின்றது. இறைவார்த்தைக்கு மாத்திரமல்ல நமது வார்த்தைகளுக்கும் வல்லமையுண்டு. தவக்காலம் என்பது நோன்பின் காலமாகும். இக்காலத்தில் நாம் குறைவான உணவினையே உண்கிறோம். அது நல்லதொரு சிந்தனையாகும். அவ்வாறே நாம் குறைந்தளவு பேசவும் முடியும். அவ்வாறாயின் நமது மூடிய வாயினூடாக அடுத்தவரை புண்படுத்தும் வாய்ப்பு குறைவாகிறது.

நாம் பேசுவதற்கு முன்னதாக மூன்று எளிய வழிமுறைகளைப் பின்பற்றலாம். இதுஉண்மையா? இதைக்குறித்து நான் உறுதியாக உள்ளேனா அல்லது இது வெறும் வதந்தியா? இது அவசியமானதா? இது குறித்துநான் சொல்லவேண்டுமா? நான்தான் சொல்லவேண்டுமா? இதுநன்மை தருவிப்பதா? நான் சொல்லப்போவது அர்த்தமுள்ளதா அல்லது அடுத்தவருக்கு பயனுள்ளதா அல்லது ஏதாவது விதத்தில் அவருக்கு தீங்குவருவிப்பதா?

தவக்காலத்தில் இந்த மூன்றுஆலோசனைகளைப் பின்பற்றினால்,நமதுவார்த்தைகளை விட மௌனத்திற்கு அதிக வல்லமை இருக்கலாம். நமது மௌனம் உண்மையிலேயே கடவுளின் வார்த்தையாகவும் இருக்கலாம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# சுகாதாரத் துறை தொழிற்சங்கங்களின் கோரிக்கையை பரிசீலிக்க விசேட குழு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சுகாதார தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளை பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரமேஷ் பத்திரனவுக்கும் சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பிற்கும் இடையில் நேற்று முக்கிய கலந்துரையாடல் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில், சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தமது கோரிக்கைகள் தொடர்பில் அமைச்சருக்கு விளக்கினர்

சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் தொடர்பில் பிரேரணையொன்றை தயாரித்து சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்குமாறு, இதன்போது அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த கோரிக்கைகளை பரிசீலித்து நியாயமான தீர்வை பெற்று தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அடங்கிய விசேட குழுவொன்றை நியமிக்குமாறு சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

இதற்கு இணக்கம் தெரிவித்த அமைச்சர், அந்தக் குழுவை நியமித்துள்ளதுடன் அந்தக் குழு இன்று (20) பிற்பகல் 3 மணிக்கு கூடி இது தொடர்பில் உரிய தீர்மானங்களை மேற்கொள்ளவுள்ளது.




## உள்ளூராட்சி வேட்புமனுக்களை இரத்துச் செய்ததாக அறிவிப்பு

உள்ளூராட்சி மன்ற தேர்தல் வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையை கருத்திற்கொண்டு இவ்வாறு வேட்பு மனுக்களை இரத்து செய்யும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களை இரத்து செய்வதற்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவும் பரிந்துரைத்திருந்தது.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்த அரச ஊழியர்கள் உள்ளிட்ட வேட்பாளர்கள், எதிர்நோக்கிய அசௌகரியங்களை கருத்திற்கொண்டு இவ்வாறு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்தக் காரணங்களை கருத்திற்கொண்ட அரசாங்கம்,உள்ளூராட்சி மன்ற வேட்பு மனுக்களை இரத்து செய்யத் தீர்மானித்தது.

# சகல கடன் மறுசீரமைப்புக்களும் ஜூனில் நிறைவு செய்யப்படும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



கடன் மறுசீரமைப்பே, நாடு அண்மைக்காலமாக எதிர்கொண்ட பாரிய பொருளாதார சவாலாக உள்ளதாகவும் எதிர்வரும் ஜூன் மாதமளவில் சகல கடன் மறுசீரமைப்புக்களும் முழுமையாக நிறைவுசெய்யப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ள நிலையில், எதிர்வரும் ஜூன் மாதமளவில் அனைத்து கடன் மறுசீரமைப்பையும் முழுமையாக நிறைவுசெய்வதே அரசாங்கத்தின் இலக்காகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, வெளிநாட்டுக் கடன் பல்தரப்பு மற்றும் இருதரப்பு கடன் என இரண்டு பிரிவாக இக் கடன் மறுசீரமைப்புக்கள் காணப்படுகின்றன. அந்தவகையில், பல்தரப்பு கடனை தொடர்ச்சியாக செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இரு தரப்பு வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பேச்சுவார்த்தைகள் மிகவும் சாத்தியமான வகையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாடுகளுக்கிடையிலான கடன் தொடர்பில் பேச்சுவார்த்தை மார்ச் மாதம் நிறைவில் பூர்த்தியாகும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திறமையுடனான பிணைமுறி தொடர்பிலான பேச்சுவார்த்தை ஏப்ரல் மாதமளவிலும் மற்றும் கடன் மறுசீரமைப்பு ஜூன் மாதமளவிலும் முழுமையாக நிறைவுசெய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொருளாதார ஸ்திரத்துக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவும்

## வெளிவிவகார அமைச்சின் செயலாளரிடம் அமெரிக்க இராஜதந்திரி தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அமெரிக்கா தொடர்ச்சியான உதவிகளை வழங்குமென, அமெரிக்க இராஜதந்திர மற்றும் பொது விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் எலிசபெத் எம். எலன் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தனவுக்கும் எலிசபெத் எவனுக்குமிடையில் வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பிலே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில், இலங்கை, அமெரிக்க 75 வருடஉறவுகளின் முன்னேற்றங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

பொருளாதார ஸ்திர இலக்கைஅடைவதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கைக்குஉதவுமென அவர் உறுதியளித்தார்.

மக்களுக்கிடையிலான உறவுகள் மற்றும் புலம்பெயர்ந்துள்ள மக்களை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு எலிசபெத் எம் எலன் நேற்று முன்தினம் இலங்கைக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர், ஊடகத்துறை பிரதிநிதிகள், டிஜிட்டல் தொடர்பான துறை சார்ந்தவர்கள், மற்றும் இளைஞர்கள் அணி தலைவர்களையும் சந்திக்கவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, முகாமைத்துவம் மற்றும் வளங்களுக்கான அமெரிக்க பிரதி வெளியுறவு செயலாளர் ரிச்சர்ட் ஆர் வெர்மாவும் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## துபாயில் உயிரிழந்த ரெஜினாவின் சடலம் நாட்டுக்கு அனுப்பி வைப்பு




துபாயில் மரணமடைந்த இலங்கை பெண் ரெஜினாவின் (வயது 38) சடலம் அவரது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணவர் மற்றும் மூன்று பிள்ளைகள் நாட்டில் இருக்கும் நிலையில், பிழைப்புக்காக இவர் துபாய் சென்றிருந்தார். இந்நிலையில், உடல்நலம் பாதிக்கப்பட்ட இவர், கடந்த ஜனவரி 24 இல் துபாய் ராஷித் மருத்துவமனையில் மரணமடைந்தார்.

இதையறிந்த துபாயில் பணிபுரியும் அவரது சகோதரி ஷார்ஜாவில் வசித்து வரும் நண்பி சுந்தரியை தொடர்பு கொண்டார். இதுபற்றி சமூக ஆர்வலரான முதுவை ஹிதாயதுக்கு அறிவிக்கப்பட்டது.

மேலும், இலங்கை துணை தூதரகம், கொழும்பிலுள்ள வெளியுறவுத்துறை அமைச்சகம் ஆகியவற்றுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. எனினும் முறையான உதவி கிடைக்கவில்லை.

துபாயில் செயல்பட்டு வரும் இலங்கை லயன்ஸ் கிளப் நிர்வாகிகள் பெரேரா உள்ளிட்டோரின் ஒத்துழைப்புடன் அவரது உடல் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை (18) அவரது சடலம் சொந்த ஊரில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# கரையோர கண்காணிப்புக்கு அமெரிக்க விமானம் அன்பளிப்பு



இலங்கையின் கரையோர பாதுகாப்பிற்காக விமானம் ஒன்றை வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது. அமெரிக்க இராஜதந்திரி டொலாண்ட லியு இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விசேட சந்திப்பொன்றில் கலந்து கொண்ட அவர், இலங்கைக்கு 'கிங் எயார்' விமானமொன்றை வழங்க வுள்ளதாக குறிப்பிட்டார். இவ்விமானம் இவ்வருடத்திற்குள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா இதற்கு முன்னர் இலங்கையின் கரையோரப் பாதுகாப்பிற்காக கடற்படையினருக்கு படகுகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## இலங்கை வங்கி

### ஏலவிற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**வசதி தொடர்பு இல : 80057867**

**இல. 62, புலஸ்திகம, ஹிங்குரக்கொட எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி. நாளிகா தமயந்தி ஹெட்டியாரச்சியின் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் **2018.10.05ஆம் திகதி 2092ஆம்** இலக்க வர்த்தமானியிலும் **2018.09.25ஆம் திகதி டெய்லி நியூஸ், தினகரன் மற்றும் தினமின** ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் **50/3 விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 2024.03.15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.12.30 மணிக்கு** அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. வடமத்திய மாகாணம் பொலன்னறுவை மாவட்டம் ஹிங்குரக்கொடை பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் சிதரங்கல பிரிவு சிங்கள பற்றுவ இல.04ன் புலதிசிகம 75 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹிங்குரக்கொட, கிராமத்தில் அமைந்த **"தமன மூகலான அல்லது ஜோன்கொலஸ் வத்த"** என அழைக்கும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் I.H.M.S.J.B. ஹேரத் தயாரித்த 03.04.2012 திகதியிட்ட வரைபடம் இல.1405ல் விபரித்த **துண்டு 2** என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு **வடக்கில்** F.C.P.Po. 132ல் துண்டு இலக்கங்கள் 319 மற்றும் 267ம், **கிழக்கில்** F.C.P.Po. 132ல் துண்டு இல.267ம், **தெற்கில்** வரைபடம் இல.1405ல் துண்டு இல.01ம், **மேற்கில்** F.C.P.Po. 132ல் துண்டு இல.319ம் வரைபடம் இல.1405ல் துண்டு 01ம் எல்லைகளாகக் கொண்டு **பதினைந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே15) அல்லது ஹெக்டயர்கள் பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று ஏழு ஒன்பது (ஹெக்டெயர்கள் 0.0379)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் அத்துடன் மேற்குறிப்பிட்ட துண்டு இல.2க்கான வழிப்பாதையை உபயோகிப்பதற்கான உரிமையும் ஆகும். இது **பொலன்னறுவை** மாவட்ட காணிப்பதிவகத்தில் **G/4/145ல்** பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஏலவிலைகூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் 2024.03.15ஆம் திகதியிலிருந்து பார்வையிட முடியும்.

தொலைபேசி இலக்கம் : 027-2247642

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**இலங்கை வங்கி**
**ஹிங்குரக்கொட**

**ஈ.எம்.சி.டி.கே. ஏக்கநாயக்க**
**முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# காமினி ஜயவிக்கிரம பெரேராவின் இறுதிக்கிரியைகள் இன்று பன்னலயில்



முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தனது 83 ஆவது வயதில் (17) காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20) செவ்வாய்க்கிழமை பன்னலயில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குளியாப்பிட்டி, பன்னல பொது விளையாட்டு மைதானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறவுள்ளன.

1941ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் திகதி பிறந்த காமினி ஜயவிக்கிரம பெரேரா, ஐ.தே.க. வின் முன்னாள் தவிசாளர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சரும் ஆவார். கிராம சபை உறுப்பினரான இவர், 1968 முதல் தீவிர அரசியலில் ஈடுபட்டார். 1977 இல் பாராளுமன்ற உறுப்பினரான இவர், 1978 இல் குருநாகல் மாவட்ட அமைச்சராக செயற்பட்டார்.

1987 இல் வடமேல் மாகாண சபை முதலமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். 1994 இல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இவர், 1998 இல் எம்.பி. பதவியை இராஜினாமா செய்தார். இறுதியாக 2000ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

சிறிது காலம் சுகவீனமுற்றிருந்த முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவின் நலன் விசாரிப்பதற்காக கடந்த பெப்ரவரி 11) கட்டுகம்பலையிலுள்ள அவரின் இல்லத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்தார். இதன் போது முன்னாள் அமைச்சரின் நலன் பற்றி விசாரித்த ஜனாதிபதி, அவருடன் சிறிது நேரம் உரையாடலிலும் ஈடுபட்டதோடு, குடும்ப உறுப்பினர்களிடம் அவர் பற்றிய தகவல்களை கேட்டறிந்தார்.

இச்சந்திப்பில் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், காமினி ஜயவிக்ரம பெரேராவின் புதல்வரும் வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அசங்க ஜயவிக்கிரம, குருநாகல் மாவட்ட அரசியல்வாதிகள், பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்டோர் இணைந்திருந்தனர்.

# மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவம்

(உடப்பு குறூப் நிருபர் )

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவம் ஒன்று ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது. சமூக ஆர்வலர் வை.கந்தசாமியினால் (15)திகதி ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் ஆண்டிமுனை த.ம.வித்தியாலயத்திற்கு வழங்கப்படவிருந்த 500000.00ரூபா பெறுமதியான உபகரணங்கள் வித்தியாலய அதிபரின் ஆலோசனையின் பின்னர் உடப்பூரின் ஏனைய பாடசாலைகளுக்கும் வழங்கி வைக்க தீர்மானிக்கப்பட்டது.

## சிறுமியின் கொலைக்கு...

கிராம மக்கள் இந்த அமைதி வழிப் போராட்டத்தை முன்னெடுத்தனர். சிறுமியின் மரணத்திற்கு தாமதமின்றி நீதி கிடைக்க வேண்டும் எனக் கோரியும், விசேட நீதிபதிகள் அடங்கிய குழுவினர் இந்த வழக்கை விசாரிக்க வேண்டியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர். இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக்காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணி வரை இடம்பெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி வழங்கு, விசேட விசாரணை பொலிஸ் குழுவை நியமி, சிறுவர்களை உயிர் போல் காப்போம், இணையவழிப் பாலியல் துஷ்பிரயோகங்களை நிறுத்துங்கள், எமது சிறுவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும் போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை இவர்கள் ஏந்தி நின்றனர். தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமி ஒருவர் கொலை செய்யப்பட்ட நிலையில், சடலமாக மீட்கப்பட்டார். இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 48 மணி நேரம் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசார

## மலையக தமிழர்களின் உரிமைகளை...

ஜனாதிபதி தெரிவித்தார். இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்காக 10,000 வீடுகளை நிர்மாணிக்கும் 'பாரத் லங்கா' வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டம் ஜனாதிபதி செயலகத்திலிருந்து நேற்று நிகழ்நிலை மூலம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

பாரத்லங்கா வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டத்தின் கீழ் 10 மாவட்டங்களிலுளள்ள , 45 தோட்டங்களில், 1300 வீடுகளை நிர்மாணிப்பதற்கு அடிக்கல் நடும் வகையில் ஒன்லைன் ஊடாக நினைவுப் பலகை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரும் இணைந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி;

10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டத்தில் முதல் கட்டமாக 1300 வீடுகளுக்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தின் நன்கொடைகளைப் பயன்படுத்தி இத் திட்டத்தை முன்னெடுக்கிறோம்.

மலையக தமிழ் மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இந்திய அரசாங்கம் இந்த வீட்டுத் திட்டத்தை வழங்கியது. அதற்காக இந்திய அரசுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றிய மலையக தமிழ் மக்கள் தங்களுக்கென காணியும் வீடும் இல்லாமை பெரும் குறைபாடாக இருந்தது.

உண்மையில், குறிப்பிட்ட காலம் அவர்களுக்கு வாக்குரிமை கூட இருக்கவில்லை. எனினும், அந்த அரசியல் உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. எனினும், பொருளாதார, சமூக உரிமைகளை வழங்க வேண்டியுள்ளது. அதில் ஒரு பகுதியை நாம் தற்போது முன்னெடுத்துள்ளோம்.

வீடுகளை அமைப்பதற்கு காணிகளைப் பெற வேண்டியுள்ளது. அதற்காக தோட்டக் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியுள்ளது.

சில வேளை அரச காணிகளை வழங்க நேரிடும். இதற்கமைய வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

மலையக தமிழ் மக்களின் கல்வி நிலைமை ஏனைய பிரதேசங்களை விட பின்தங்கியுள்ளது. மலையக தமிழ் பிரதேச பாடசாலைகளை ஏனைய பாடசாலைகளுக்கு நிகராக மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை அனைத்துப் பிரதேச செயலகங்கள் ஊடாகவும் முன்னெடுக்கத் திட்டமிட்டு வருகிறோம். ஏனைய மக்களைப் போல இந்த மக்களுக்கும் அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மலையகத்தில் வாழும் அனைவரும் தோட்டத் தொழிலாளர்களல்ல. கல்வி பெறுவதற்கான உரிமையை உறுதி செய்வதோடு தொழிற்பயிற்சி பெறுவதற்கான வசதிகளை இளைஞர் யுவதிகளுக்கு வழங்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களாக அவர்களை தொடர்ந்து வைத்திருக்க முடியாது.

தோட்ட ஒப்பந்தங்களுக்கு அமைய காணித் துண்டொன்றை வழங்கி சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிகராக அந்த மக்களை மேம்படுத்துவது குறித்து ஆராயப்படுகிறது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் இது தொடர்பில் அதிக ஆர்வத்துடன் பணியாற்றி வருகிறார். அதேபோல் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் உட்பட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இணைந்துக் கொண்டு, கட்சி பேதமின்றி இது குறித்த யோசனைகளை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## இடைக்கால தடையுத்தரவு...

இதற்காக 12 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதே போன்று சீருடைகளுக்கும் 6.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் இரு வாரங்களுக்குள் சீருடைத் துணிகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலை தவணைகள் மற்றும் பரீட்சைகளுக்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டு இரு வாரங்களுக்குள் சுற்று நிருபம் ஊடாக சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்படும்.

கடந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையை, மே ஜூன் மாதங்களில் நடத்துவதற்கும், உயர்தர பரீட்சையை டிசம்பரில் நடத்தவும் எதிர்பார்த்துள்ளோம்.அந்தவகையில்,சாதாரணபரீட்சைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் உயர்தர பரீட்சையின் பெறுபெறுகளை வெளியிடவும் தீர்மானித்துள்ளோம்.

கடந்த 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது பாடசாலை இடை விலகல் 7 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

பாடசாலை இடைவிலகல்கள் பாரியளவில் அதிகரித்துள்ளதாக அண்மையில் வெளியான செய்திகள் உண்மையானவையல்ல.

ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்காக கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போட்டிப்பரீட்சை நீதிமன்ற இடைக்கால தடையுத்தரவு காரணமாக சுமார் 10 மாதங்கள் கால தாமதமாகியுள்ளது.

பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயிற்சியுடன் ஆசிரியர் சேவையில் இணைப்பதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கமையவே, இவ்வாறு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக 52 000 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. நீதிமன்ற விசாரணைகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளன.

எதிர்வரும் ஓரிரு வாரங்களுக்குள் இது தொடர்பான தீர்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறோம். நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்தவுடன் இந்த நடவடிக்கைகளை எம்மால் முன்னெடுத்துச் செல்ல முடியும். இந்த செயற்திட்டத்தின் கீழ் 22, 000 பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இது தவிர மேலும் 13 ,500 பேருக்கு ஆசிரியர் நியமனத்தை வழங்கும் நடவடிக்கையும் கிடப்பில் உள்ளது. ஓய்வு பெற்ற மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள ஆசிரியர்களுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக மாகாண மட்டத்தில் ஆசிரியர்களை சேவையில் இணைப்பதற்காக சில மாகாணங்களில் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டு, நேர்முகத்தேர்வும் நிறைவடைந்துள்ளது.

நியமனம் வழங்க வேண்டியது மாத்திரமே எஞ்சியுள்ள நிலையில், இதற்கு எதிராகவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ள போதிலும், தீர்ப்பு மூன்று சந்தர்ப்பங்களில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இவ்வாரத்தில் அந்த தீர்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

நீதிமன்ற தீர்ப்பையடுத்து 35 000க்கும் மேற்பட்டோருக்கு நியமனங்களை வழங்கி ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வினை பெற்றுக் கொடுக்க முடியும்.

இவர்களைத் தவிர விஞ்ஞானத் துறையிலும், தொழிநுட்ப துறையிலும் 5500 பட்டதாரிகளை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

மாகாண மட்டத்தில் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான அனுமதி கிடைத்துள்ளது. மார்ச் முதல் வாரத்தில் இதற்கான போட்டிப் பரீட்சையை நடத்த திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பத்தாயிரம் இந்திய வீட்டுத்திட்டம்...

பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் குறிப்பிட்டதாவது:

பெருந்தோட்டங்களில் கட்டப்படும் வீட்டுத்திட்டங்களை பத்தாயிரமாக அதிகரிப்பதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி 2017 இல் அறிவித்தார்.

நாம் ஆதரவு வழங்கிய ஆட்சி 2019 இல், முடிந்ததால் இத்திட்டத்தை தொடர முடியாது போனது. இருந்தாலும், தற்போது அதிகரிக்கப்பட்ட இவ்வீட்டுத்திட்டம் ஆரம்பமாகியுள்ளதை வரவேற்கிறேன்.

எமது ஆட்சியில் ஏழு பேர்ச்சஸ் காணிகள் என அறிவித்தோம்.2019 இல், ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் இருபது பேர்ச்சஸ் என அறிவித்தனர்.பின்னர் கடந்த பட்ஜட்டில் பத்து பேர்ச்சஸ் என அறிவிக்கப்பட்டது.

இதனால், இன்று ஆரம்பிக்கப்படும் இந்திய வீடமைப்பு திட்ட வீட்டுக் காணிகளின் விஸ்தீரணம் பற்றிய ஒரு தெளிவின்மை மக்கள் மத்தியில் இருக்கிறது.

இன்று ஆரம்பிக்கப்படும் இத்திட்டத்தில் கட்டப்படும் வீட்டு காணி விஸ்தீரணம், ஏழு பேர்ச்சசா, பத்து பேர்ச்சசா அல்லது இருபது பேர்ச்சசா என்ற விபரத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.

காணி விஸ்தீரணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் நாம் பெருமகிழ்ச்சி அடைவோம்.

2017இல் , எமது ஆட்சியின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் 10,000 இந்திய வீடமைப்பு திட்டம் அறிவிக்கப்பட்டது. அது,இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை இதயபூர்வமாக வாழ்த்தி வரவேற்கிறோம் என்றார்.

## இலங்கையின் இறையாண்மையை...

நடவடிக்கைக்கு உதவும் கிங் விமானத்தையும் அமெரிக்கா வழங்குவுள்ளது.

இந்தோ பசிபிக் கடல்சார் கள விழிப்புணர்வு முயற்சியின் மூலம், தெற்காசியா உட்பட பரந்த பிராந்தியத்தைச் சுற்றியுள்ள நாடுகளுக்கு நிகழ்நேர வணிக செயற்கைக்கோள் தரவை அமெரிக்கா வழங்கும்.

கடற்கொள்ளையர், போதைப் பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத கடற்றொழில் ஆகியவற்றால் நாடுகள் எதிர்கொள்ளும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பு பெற

இந்த திட்டம் உதவும்" எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், பொருளாதார மீட்சி தொடர்பான இலங்கையின் சமீபத்திய முன்னேற்றம் குறித்தும் அவர் பாராட்டினார்.

## நாகப்பட்டினம்காங்கேசன்துறை...

வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார். நாகப்பட்டினம், காங்கேசன்துறைக்கிடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை கடந்த வருடம் ஒக்டோபர் (17) ஆரம்பமாகியது.பின்னர் இச்சேவை நிறுத்திவைக்கப்பட்டு பின்னர் ஆரம்பமாகி தற்போது மீண்டும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலே சந்தோஸ் ஜா இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார். கடந்த 15 முதல் 17 வரை சந்தோஸ் ஜா வட பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தில், அவர் பங்கேற்ற பல்வேறு நிகழ்வுகள், இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதியான அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியதாக உயர்ஸ்தானிகராலய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சரத்பொன்சேகாவை...

பல ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்நிலையில் பொன்சேகாவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை (19) இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

## ஐக்கிய நாடுகள் பணிப்பாளருடன்...

பொருளாதார சவால்களை வென்றெடுக்க ஜனாதிபதி ஆற்றிய பங்களிப்புக்களை பாராட்டிய பணிப்பாளர் நாயகம் புதிய சீர்திருத்தங்களூடாக நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இந்த நெருக்கடியான சமயத்தில் இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் உணவு மற்றும் விவசாய அமைப்பு தொடர்ந்து பூரண ஆதரவை வழங்கும் என்றும் பணிப்பாளர் நாயகம் உறுதியளித்தார். இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகத்திற்கு விளக்கமளிக்கப்பட்டது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதில் விவசாயம் முக்கிய துறையாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு உணவு மற்றும் விவசாய அமைப்பின் பங்களிப்பையும் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

# இன்றைய பலன்கள்

(20.02.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த காரியம் இம் மாதம் நடைபெறும்.

**ரிஷபம் :**
பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்து காத்திருந்த ஒரு சில நல்ல காரியங்கள் இப்பொழுது நடைபெறும்.

**மிதுனம்:**
மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்:**
இந்த நேரம் நல்ல நேரம் தான். மறைந்தத புதனால் திடீர் திடீரென பணவரவு வந்து மகிழ்விக்கும்.

**சிம்மம்:**
வாகனம் வாங்கும் யோகம் உண்டு வருங்கால நலன் கருதி எடுத்த புது முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

**கன்னி:**
உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உண்டு.

**துலாம்:**
தொழில் தொடர்பாக எடுத்து முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும்.

**விருச்சிகம்:**
நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைத்து உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கும் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு:**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு மேலிடத்திலிருந்து ஆதரவு கிடைக்கும்.

**மகரம்:**
இந்த நேரம் நாடு மாற்றம் செய்ய நினைப்பவர்கள் கொஞ்சம் யோசித்து செய்வதே நல்லது.

**கும்பம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மீண்டும் பணியில் சேர வாய்ப்பு கிட்டும்.

**மீனம்:**
கல்விக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மாமன் மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும்.

## டி.ஆர்.விஜயவர்தனவின்... (03ஆம் பக்க தொடர்ச்சி)

கோட்டை ஸ்ரீ சம்புத்தலோக்க விஹாரை மற்றும் ஹுனுபிட்டிய கங்காராம விஹாரையின் தேரர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். சமய அனுஷ்டானம் வழங்கும் நிகழ்வுக்கு தேரர்களை அழைத்து வரும் பெரஹர அன்று இரவு 8.45 மணிக்கு கோட்டை ஸ்ரீ சம்புத்தலோக்க விஹாரையிலிருந்து ஆரம்பமாகும். இந்த சமய அனுஷ்டானம் வழங்கும் நிகழ்வு தேசிய தொலைக்காட்சியிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் நேரடியாக ஒளி, ஒலிபரப்பு செய்யப்படும். மறுநாள் (22) தானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

## கெஹெலியவின் உடல்நிலையை...

நியமிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இக்குழுவில்,

இருதய நோய்கள், எலும்பு நோய்கள் மற்றும் நுரையீரல் நோய்களில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களையும் உள்ளடக்குமாறும் நீதவான் மேலும் உத்தரவிட்டுள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு மாளிகாகந்த நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கெஹலிய ரம்புக்வெல்லவை நீதிமன்றில் ஆஜர்படுத்த முடியாதுள்ள நிலைமைகள் குறித்து,சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம விடுத்த கோரிக்கையை

நீதிமன்றம் ஏற்றுள்ளது.இதையடுத்தே,விசேட குழுவை நியமிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கெஹெலியவின் உடல் நிலை தொடர்பிலான விசாரணை அறிக்கைய இம்மாதம் (26) க்குள் நீதிமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## உலக சாதனை படைத்த...

இக்குழந்தையின் திறமையை உலகிற்கு வெளிப்படுத்தவதற்கு, வீடியோவாக நோபல் உலக சாதனைக்கு அனுப்பியதாக குழந்தையின் தாயார் குறிப்பிட்டுள்ளார்.

## தாய், மகளை படுகொலை செய்த...

மேல் நீதிமன்ற நீதிபதி, லங்கா ஜயரத்ன நேற்று மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

இரத்தினபுரி, கொட்டகெதன பிரதேசத்தை சேர்ந்த நீல் லக்ஷ்மன் என்ற குற்றவாளியான நபருக்கே நீதிமன்றம் இத்தண்டனையை விதித்துள்ளது.

கடந்த 2012 ஜூலை 19 இல், இந்தக் இரட்டைப் படுகொலை சம்பவம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பண்டிகை காலத்தில்...

ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, லங்கா சதொச நிறுவனங்களில் முட்டைகள் விநியோகிக்கும் செயற்பாடுக் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தக

அமைச்சர் நளின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

## மின்சாரத்தை சிக்கனமாக...

சதவீதமாக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சூரியசக்தி மூலம் 4.5 வீத மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

காற்றாலை மூலம் 05 வீத மின்சாரம் உற்பத்தியாகிறது. 64 வீத மின்சாரம் அனல் மின் உற்பத்தி மூலம் பெறப்படுகிறது.

இதனால் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு இலங்கை மின்சார சபை, மக்களை அறிவுறுத்தியுள்ளது.

## சுகாதார அமைச்சுக்கு...

அமைச்சிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று கொழும்பு துறைமுகத்தில் இடம்பெற்றது. பெறப்பட்ட டீசல் விநியோகத்திற்காக எரிபொருள் மேலாண்மை தகவல் அமைப்பு உருவாக்கப்பட்டது. மேலும் இந்த அமைப்பில் எரிபொருளைப் பெற்ற வாகனங்கள், பெறப்பட்ட எரிபொருளின் அளவு மற்றும் சுகாதார நிறுவனங்கள் பற்றிய அனைத்து தகவல்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் சைக்கிளுடன்...

இவ்விபத்தில் மரணமடைந்த இப்பெண் நேற்றுப் பிற்பகல் தனது பிள்ளையுடன் மற்றுமொரு பிள்ளையையும் மேலதிக வகுப்புக்கு அழைத்துச் சென்றபோதே இவ்விபத்து நிகழ்ந்தது. இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள், ரயிலில் மோதியது.

மூவரின் சடலங்களும் முந்தல் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இறைவனிடமிருந்து நம்மை பிரிக்கும் சோதனைகளை வெற்றி கொள்வோம்

## திருப்பயணிகளுக்கான மறையுரையில் திருத்தந்தை பிரான்சிஸ்

இயேசுவைப் போல நாமும் அமைதி, உள்ளார்ந்த உலகம், இதயத்தின் குரலுக்கு செவி சாய்த்தல், உண்மையுடன் தொடர்பு கொள்ளுதல் என்ற பாலைவனத்திற்குள் நுழைய இத் தவக்காலத்தில் அழைக்கப்படுகின்றோம் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.

தீயொழுக்கங்கள், செல்வத்தின் மீதான பற்று, வீண் விருப்பம், புகழ் பேராசை என்னும் காட்டு விலங்குகளிடையே நாம் வாழ்கின்றோம் என்பதை சுட்டிக்காட்டிய அவர், தவக்காலத்தின் முதல் வார நற்செய்தி வாசகமான இயேசு சோதிக்கப்படுதல் என்னும் பகுதி குறித்த தனது கருத்துக்களை எடுத்துரைத்தார்.

கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பேராலய வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய உரையின் போது இவ்வாறு கூறிய அவர்,வானதூதர்களால் இயேசு பாலைவனத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது போல நாமும் அமைதி என்னும் பாலைவனத்திற்குள் செல்ல இத்தவக்காலத்தில் அழைக்கப்படுகின்றோம் என்றார்.



இயேசு காட்டு விலங்குகளிடையே இருந்தார் வானதூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தது போல நாமும் தீயொழுக்கங்கள் என்னும் காட்டுவிலங்குகளிடையேயும் நல் எண்ணங்கள் மற்றும் நல்உணர்வுகள் என்னும் வானதூதர்களால் பணிவிடை செய்யப்படுகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். சோதனைகள் நம்மை இறைவனிடம் இருந்து பிரிக்கின்றன நல்ல தெய்வீக முயற்சிகள் நம்மை ஒருங்கிணைத்து நல்லிணக்கத்திற்கு கொண்டு வருகின்றன, அவை இதயத்தை அமைதிப்படுத்துகின்றன. விண்ணகத்தின் சுவையை, கடவுளின் ஆற்றலை நாம் இன்னும் அதிகமதிகமாகப் புரிந்துகொள்ள அமைதிக்குள் நுழைய வேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை.

கடவுளின் குரலானது நமது இதயத்தோடு உரையாட நம்மை நாம் அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இத் தவக்காலத்தில் அமைதிநிறைந்த மனதுடன் வழிபடவும், இறைவனின் குரலை நம் வாழ்வில் கேட்கவும், அச்சமின்றி இருக்கவும், உலகுக்குரிய காரியங்களை அகற்றிவிட்டு, இறைவனுக்குரிய செயல்களில் நம் இதயங்களைத் திருப்பவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாம் வெறும் தூசு என்பதையும், இந்தத் தூசு கடவுளால் பாதுகாக்கப்படுகிறது என்பதையும் ஒப்புக்கொள்வோம் என்பதை மீண்டும் நினைவூட்டிய திருத்தந்தை, நாம் பாவத்தின் சாம்பலில் இருந்து இயேசு கிறிஸ்துவிலும் தூய ஆவியிலும் புதிய வாழ்க்கைக்கு மீண்டும் பிறப்போம் என்றும் நம்பிக்கையூட்டினார்.

மெரினா ராஜ்...

## பாடுகளின் பாதையில் தவக்கால சிறப்பு தியானம்



'பாடுகளின் பாதையில்'தவக்கால சிறப்பு தியானமும் திருப்பலியும் கொழும்பு புதுச்செட்டித் தெரு புனித வியாகுல மாதா ஆலய பங்கின் ஏற்பாட்டில் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தியாவின் பாளையங்கோட்டை மறைமாவட்டத்திலிருந்து வருகை தந்துள்ள அருட்பணி சகாயராஜ் சுதன் அடிகளாரின் வழிநடத்தலில் இந்த நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் மார்ச் முதலாம் திகதி வரை (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை) இந்த தியான நிகழ்வுகள் நடைபெறவுள்ளதுடன் அதனையடுத்து எதிர்வரும் மார்ச் 4 ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை மாலை 6:00 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளன.




## ஜோசப் வாஸ் மன்ற திறந்தவெளி சிலுவைப்பாதை









கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றம் வருடாந்தம் நடத்தும் தவக்கால திறந்த வெளி பெரிய சிலுவைப் பாதை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு பி. அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் அன்றைய தினம் பிற்பகல் 3 .15 மணிக்கு புதுச்செட்டித் தெரு புனித வியாகுலமாதா ஆலயத்திலிருந்து சிலுவைப் பாதை பவனி ஆரம்பமாகி கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தை சென்றடைந்தது. அதனைத் தொடர்ந்து பேராலய முன்றலில் சிறப்புத் திருப்பலி துணை ஆயர் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.சிலுவைப்பாதை தியானத்தின் போது அருளுரைகளை மன்றத்தின் ஸ்தாபகர் அருட்பணி ஆனந்தன் பெர்னாண்டோ புள்ளே அடிகளாரின் தலைமையில்அருட் பணியாளர்கள் பலரும் வழங்கினர். சிலுவைப்பாதை காட்சிகளை படங்களில் காணலாம். (படங்கள் உதவி: வினோலிசன் பெர்னாண்டோ)

# தவக்காலம் மாற்றங்களைக் கொணரும் வசந்த காலமாகட்டும்

Valentine's Day என்றழைக்கப்படும் அன்பின் திருநாளன்று நாம் இம்முறை தவக்காலத்தைத் தொடங்கியிருப்பது இறைவன் நமக்கு வழங்கியுள்ள வரமாக எண்ணிப்பார்ப்போம்.

நாம் பயணிக்கின்ற இந்த தவக்காலம் முழுவதையும், அன்பு எண்ணங்களால், செயல்களால் நிறைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வோம்.

இந்த வழிபாட்டு காலத்திற்கு, நாம் வழங்கியுள்ள பெயர், நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது. தமிழில் 'தவக்காலம்' என்று நாம் அழைப்பதை, ஆங்கிலத்தில் Lent அல்லது Lenten Season என்று அழைக்கிறோம்.

Lent என்ற சொல், 'lente' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து வந்தது. இலத்தீன் மொழியில், 'lente' என்றால், 'மெதுவாக' என்று பொருள். Lenten என்ற சொல், Lencten என்ற ஆங்கிலோ சாக்ஸன் (Anglo Saxon) சொல்லிலிருந்து வந்தது. இதன் பொருள் 'வசந்தகாலம்'. 'மெதுவாக', 'வசந்தகாலம்' என்ற இரு சொற்களையும் இணைக்கும்போது உருவாகும், 'மெதுவாக வரும் வசந்தகாலம்' என்ற சொற்றொடர், தவக்காலத்திற்கு அழகியதோர் அடையாளம்.

உலகின் பல நாடுகளில், மூன்று மாதங்கள் கடும் குளிர்காலம். குளிர்காலத்திற்கு முன்னர், மூன்று மாதங்கள் இலையுதிர் காலம். எனவே, ஏறத்தாழ ஆறு, அல்லது ஏழு மாதங்கள், மரங்களும் செடிகளும், தங்கள் இலைகளை இழந்து, பொழியும் பனியில் மறைந்து போகும்.

ஆனால், அந்த பனிக்குள்ளும், சிறு துளிர்கள், கண்ணுக்குத் தெரியாதபடி வளர்ந்திருக்கும். பனிப்போர்வை, சிறிது சிறிதாகக் கரையும்போது, புதைந்து போன துளிர்கள், தலை நிமிரும்.

'வசந்தம்' கேட்பதற்கு அழகான சொல், அழகான எண்ணம். உண்மைதான். ஆனால், அந்த வசந்தம் வருவதற்கு முன், சவால்கள் நிறைந்த மாற்றங்கள், பொறுமையாக நிகழவேண்டும்.

ஆறு மாதங்களாக உயிரற்று காணப்படும் தாவர உலகில், திடீரென, ஓரிரவில், மாற்றங்கள் உருவாகி, அது பூத்துக் குலுங்குவது கிடையாது. நம் கண்ணையும் கருத்தையும் ஈர்க்காத வகையில், மிக, மிக மெதுவாக, வசந்த காலம் வந்துசேர்கிறது.

மெதுவாக, நிதானமாக, மாற்றங்களைக் கொணரும் வசந்தகாலம், தவக்காலத்திற்கு அழகியதோர் அடையாளம்.

அடையாளங்கள், மனித வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தவக்காலம் என்றதும், பொதுவாக, சாம்பல், சாக்குத்துணி, சாட்டையடி என்ற சோகமான அடையாளங்களே மனதை நிரப்பும். ஆனால், தவக்காலத்தை, 'மாற்றங்களைக் கொணரும் வசந்தகாலம்' என்ற கோணத்தில் பார்க்க திருச்சபை நம்மை அழைக்கிறது,



மாற்றத்தை, மிகக் குறிப்பாக, மனமாற்றத்தை உருவாக்க நமக்கு வழங்கப்பட்டுள்ள ஓர் அரிய வாய்ப்பு, தவக்காலம். மாற்றத்தை நமக்கு நினைவுறுத்த, தவக்காலத்தின் முதல் நாளான திருநீற்றுப் புதனன்று நாம் பயன்படுத்தும் ஓர் அடையாளம் சாம்பல். அருள்பணியாளர், நம் நெற்றியில் சாம்பலைக் கொண்டு சிலுவை அடையாளம் வரைந்தபோது, "மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.

சில ஆண்டுகளுக்கு முன், சாம்பலை நெற்றியில் பூசும்போது அருள் பணியாளர் பயன்படுத்திய வார்த்தைகள், நம் இறுதி முடிவை நினைவுறுத்தும் வார்த்தைகளாக அமைந்தன: "நீ மண்ணாக இருக்கிறாய்; மண்ணுக்கேத் திரும்புவாய்." என்பதே அந்த வார்த்தை.

சாம்பலை, அழிவாக, மரணமாக மட்டும் எண்ணிப் பார்க்காமல், புதிய மாற்றங்களைக் கொணரும் அடையாளமாகவும் காணலாம்.

ஒரு பொருள், நெருப்பில் அழிந்ததும், உருவாவது சாம்பல். எனவே, சாம்பலை நாம் அழிவின் அடையாளமாகவே பெரும்பாலும் கருதுகிறோம். ஆனால், அதே சாம்பல், உயிர்களை வளர்க்கும் உரமாகவும், பொருள்களில் படிந்திருக்கும் கறைகளை நீக்கி, அவற்றை ஒளிமயமாக்கும் காரணியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

அழிவின் அடையாளங்களாக நாம் கருதும், சாம்பலையும், நெருப்பைப்போலவே, பெருவெள்ளமாக வரும் நீரையும், அழிவின் அடையாளமாகக் கருதுகிறோம். பெருவெள்ளத்தின் அழிவிலிருந்து, அற்புதங்களை நிகழ்த்திய இறைவனை, (தொடக்கநூல் 9: 815) நமக்கு நினைவுறுத்துகிறது.

நோவா காலத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின் இறுதியில், இறைவன், புதியதொரு வாக்குறுதியை அளித்தார். அந்த வாக்குறுதியின் அடையாளமாக வானவில்லை விண்ணில் பதித்தார். கிறிஸ்தவ மறையில் மட்டுமல்லாமல், பல்வேறு மறைகளிலும், கலாச்சாரங்களிலும், வானவில், நம்பிக்கையின் அடையாளமாகக் கருதப்படுகிறது.

அழிவிலிருந்து அற்புதங்களை உருவாக்கும் இறைவனின் வார்த்தைகள் இந்த வாசகத்தில் இவ்வாறு ஒலிக்கின்றன: கடவுள் நோவாவிடமும் அவருடனிருந்த அவர் புதல்வரிடமும் கூறியது: "இதோ! நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் வழிமரபினரோடும், பேழையிலிருந்து வெளிவந்து உங்களுடன் உயிர்வாழும் விலங்கினங்கள் எல்லாவற்றோடும், மண்ணுலகில் உள்ள எல்லா உயிர்களோடும் என் உடன்படிக்கையை நிலைநாட்டுகிறேன்...

நான் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளமாக, என் வில்லை மேகத்தின்மேல் வைக்கிறேன்." (தொடக்கநூல் 9: 813)

ஒவ்வோர் ஆண்டும், தவக்காலத்தின் முதல் ஞாயிறன்று, இயேசு, சோதனைகளைச் சந்தித்த நிகழ்வைச் சிந்திக்க, திருஅவை நம்மை அழைக்கிறது. தவக்காலத்தை, 'மாற்றங்களைக் கொணரும் வசந்தகாலம்' என்ற வித்தியாசமான கோணத்தில் சிந்திப்பதுபோல், சோதனைகளையும் கொஞ்சம் வித்தியாசமாக சிந்திக்க முயற்சி செய்வோம்.

'சோதனை' என்ற வார்த்தையைக் கேட்டதும், அவ்விடத்தை விட்டு ஓடிவிடவேண்டும் என்ற அச்சமே நம்மில் பலருக்கு தோன்றும். ஆற அமர சிந்தித்தால், சோதனைகள் இல்லாத மனித வாழ்வு இல்லை என்ற உண்மையை நாம் உணரலாம். இயேசுவே சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார். இயேசு சோதனைகளைச் சந்தித்ததும், அவற்றை அவர் வென்றதும், நற்செய்தி (மாற்கு 1:1215) நமக்குச் சொல்லித்தரும் நல்ல பாடங்கள்.

சோதனைகளை நாம் எந்த கண்ணோட்டத்தில் பார்க்கிறோம்? நோவா காலத்தில் வந்ததுபோல், தப்பித்துக்கொள்ள முடியாத அளவு பெருகிவரும் ஒரு காட்டாற்று வெள்ளமாக, சோதனைகளையும், அதில் அடித்துச் செல்லப்படும் பரிதாபமானப் பாவிகளாக நம்மையும் எண்ணிப் பார்க்கிறோம். இத்தகைய எண்ணங்களுக்கு இடம்கொடுக்கும்போது, சோதனைகளுக்கு ஓர் அபூர்வ சக்தியை நாம் தருகிறோம்.

சோதனைகளுக்கும், அவற்றின் அடிப்படைக் காரணமான தீய சக்திக்கும் அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கொடுப்பதால், உள்ளத்தில் நம்பிக்கை குலைகிறதே, அதுதான் இன்று நம்மில் பலர் சந்திக்கும் மாபெரும் சோதனை. சோதனைகள் சக்தி வாய்ந்தவைதான். மறுப்பதற்கில்லை. ஆனால், அவற்றை எதிர்த்து நிற்கவும், அவற்றோடு போராடி வெற்றிபெறவும், நமக்கு சக்தி உள்ளது. இதை நாம் நம்பவேண்டும்.

நாம் வாழும் உலகில், ஆக்கப்பூர்வமான செயல்கள், ஆயிரக்கணக்கில், ஒவ்வொரு நாளும் நடக்கின்றன. ஆங்காங்கே தீயவைகளும், அழிவுகளும் நடக்கின்றன. ஆனால், நல்ல நிகழ்வுகளை காட்டுவது, விறுவிறுப்பைத் தராது என்பதாலும், அவற்றால், இலாபம் இல்லை என்பதாலும் அழிவுகளையும் பாதிப்புகளையுமே ஊடகங்கள் காட்டுகின்றன.

இந்த உலகத்தின் அழிவு சக்திகளுக்கு முன் நாம் வெறும் பார்வையாளர்கள் தான்... நம்மால் எதுவும் செய்ய முடியாது என்ற தவறான முடிவுக்கு நாம் வருகிறோம். இதுவே இன்று நம் மத்தியில் உள்ள பெரிய சோதனை. இந்தச் சோதனையை முதலில் நாம் வெல்ல வேண்டும்.

தம் பணிவாழ்வைத் தொடக்குவதற்கு முன்னதாகவே இயேசு சோதனைகளைச் சந்தித்தார். சோதனைகளைக் கண்டு அவர் துவண்டு போயிருந்தால், அவர் தன் மீட்புப் பணியைத் துவக்கியிருக்கவே மாட்டார்.

நல்லவேளை. இயேசு தனக்கு வந்த சோதனைகளை இனம் கண்டு வென்றதால், துணிவுடன் தன் பணிகளைத் தொடக்கினார். அதிலும் குறிப்பாக, தன் உறவினரும், முன்னோடியுமான யோவான் கைது செய்யப்பட்டதை அறிந்தபின், இயேசு, அவரது கைது நிகழ்வால் மனம் தளர்ந்து போகாமல், "கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக்கொண்டே கலிலேயாவிற்கு வந்தார்" (மாற்கு 1:14)

அருட்பணி - எல்.எக்ஸ்.ஜெரோம்

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 07ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 09

### குறள் தரும் சிந்தனை



நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு

உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக் கூடும் என்ற நிலை இருப்பதால், நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

# மின்சாரத்தை சிக்கனமாக பாவிப்பதன் முக்கியத்துவம்

இலங்கை மின்சார சபை முக்கியமான அறிவிப்பொன்றை விடுத்துள்ளது. 'நாட்டில் வரட்சிக் காலநிலை நிலவுவதால் நீர் மின்னுற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளது. அதனால் மின்சாரத்தை பொதுமக்கள் சிக்கனமாகப் பாவிக்க வேண்டும்' என்று அச்சபை கேட்டுள்ளது.

இந்த வேண்டுகோள் பலருக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தலாம். தொடரான மழைவீழ்ச்சிக் காலநிலை நீங்கி சில வாரங்கள் தான் கடந்திருக்கின்றது. அதற்கிடையில் நீர் மின்னுற்பத்தியைப் பாதிக்கக் கூடியளவுக்கு வரட்சி ஏற்பட்டிருப்பதன் வெளிப்பாடே இந்த வேண்டுகோளாகும்.

இந்நாடு கடந்த நான்கைந்து மாதங்களாக கடும் மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொண்டது. அதன் ஊடாக நீர்த்தேக்கங்கள், குளங்கள் உள்ளிட்ட அனைத்தும் நிரம்பி வழிந்தன. மின்னுற்பத்தி நீர்த்தேக்கங்கள் தத்தம் கொள்ளளவுக்கு மேலதிகமான நீரை அவ்வப்போது வான்கதவுகளைத் திறந்து வெளியேற்றின.

மேலும் இம்மழை வீழ்ச்சியினால் தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ள நிலைமை ஆங்காங்கே ஏற்பட்டது. உணவு உற்பத்தி பயிர்ச்செய்கைகளில் மிகுந்த பாதிப்புகள் ஏற்பட்டன. நாட்டில் நீடித்த மழையுடன் கூடிய காலநிலையின் தாக்கங்கள் இவ்வாறு காணப்பட்டன.

அதேநேரம் இம்மழைவீழ்ச்சிக் காலநிலைக்கு முன்னர் நாட்டில் கடும் வரட்சி நிலவியது. அதன் விளைவாக தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததோடு வனஜீவராசிகள் கூட தண்ணீர் தேடி அலையும் நிலை உருவாகி இருந்ததும் உணவுப் பயிர்ச்செய்கைகள் அழிவுற்றதும் இங்கு நினைவுகூரத்தக்கதாகும். அச்சமயம் தண்ணீரின் முக்கியத்துவம் பரவலாக உணரப்பட்டிருந்தது.

அவ்வாறான கடும் வரட்சிக் காலநிலையைத் தொடர்ந்து நாட்டில் மழையுடனான காலநிலை கடந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் ஆரம்பமானது. அந்த மழைவீழ்ச்சிக் காலநிலை சுமார் நான்கைந்து மாதங்கள் நீடித்தது. அக்காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற மழைநீரின் பெரும்பகுதி எவ்விதப் பயன்பாட்டுக்கும் உட்படுத்தப்படவுமில்லை, சேமிக்கப்படவும் இல்லை. மாறாக அந்த மழைநீரின் ஆனால் எவ்விதப் பயன்பாட்டுக்கும் உட்படுத்தப்படாத நிலையில் மழைநீரின் பெரும்பகுதி கடலில் கலப்பதைக் கண்டு தண்ணீரின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்த பலரும் கவலை அடைந்திருந்தனர்.

ஆனால் இம்மழைவீழ்ச்சி காலநிலை ஆரம்பமாவதற்கு முன்னரான வரட்சி காலநிலையில் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் மூலமாவது மழைநீரைச் சேமிப்பது குறித்து கவனம் செலுத்தி இருக்கலாம். அதுதான் துறைசார் நிபுணர்களின் கருத்தாகும். அதுவும் நடக்கவில்லை.

ஆனால் நான்கைந்து மாதங்களாகக் கிடைக்கப்பெற்று வந்த கடும் மழைவீழ்ச்சி முற்றுப்பெற்று சில வாரங்கள்தான் கடந்திருக்கிறது. அதற்கிடையில் இலங்கை மின்சார சபை, நாட்டில் வரட்சியான காலநிலை தொடர்வதால் நீர் மின்னுற்பத்தி 20 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. இதன்படி, வரட்சி காலநிலையின் தாக்கத்தைத் தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

தற்போது மின்சார சபை இவ்வாறான அறிவிப்பை விடுத்துள்ள போதிலும் எதிர்வரும் நாட்களில் விவசாயத் துறையினர் உள்ளிட்ட ஏனைய துறையினரும் தண்ணீரின் தேவை குறித்து குரல் எழுப்பும் நிலை ஏற்பட முடியும். அதனால் வரட்சியின் தாக்கத்தையும் பாதிப்புக்களையும் குறைத்து மதிப்பிட முடியாது.

வரட்சிக் காலநிலைக்கு முகம்கொடுப்பதற்கு ஏற்ப மழைவீழ்ச்சி காலத்தில் கிடைக்கப்பெறும் மழைநீரை சேமித்து கொள்வதில் இனிமேலாவது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதன் ஊடாக வரட்சி காலநிலையின் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதேநேரம் மின்சார சபையின் வேண்டுகோள் குறித்து மின்பாவனையாளர்கள் கவனயீனமாகவோ அசிரத்தையுடனோ நடந்து கொள்ளவும் கூடாது. மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவிப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தற்போது அதிக உஷ்ண காலமாகக் காணப்படுகின்ற போதிலும் மின்பாவனையில் சிக்கனம் இன்றியமையாததாகும். மின்சாரம் எந்தவிதத்திலும் வீண்விரயமாக்கப்பட இடமளிக்கலாகாது. அது மின்வெட்டுக்கு வழிவகுக்கும். அதன் விளைவாக உற்பத்தித்துறை உள்ளிட்ட பல துறைகளிலும் தாக்கங்களும் பாதிப்புக்களும் கூட ஏற்படும்.

ஆகவே மின்சாரம் வீண் விரயமடைய இடமளிக்காது சிக்கனமாக பாவிப்பதில் பாவனையாளர்கள் அக்கறை கொள்ள வேண்டும். அதுவே இன்றைய காலத்தின் அவசியத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# வடமேல் மாகாணத்தில் ஐ.தே. கட்சியின் அடையாளம் காமினி ஜயவிக்கிரம பெரேரா

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசியல் களத்தில் இறங்கிய காமினி ஜயவிக்கிரம பெரேரா, இலங்கை வரலாற்றில் மிகவும் கடினமான காலகட்டத்தில், மாகாணசபை முறை நிறுவப்பட்டதன் பின்னர் நடந்த முதல் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சரானார். வடமேற்கு மாகாணத்தில் மே 4, 1988 முதல் ஒக்டோபர் 19, 1993 வரை அவர் முதலமைச்சராகப் பணியாற்றினார்.

அந்தக் காலப்பகுதியில் அவர் எடுத்த சிறந்த முடிவுகளினால் வடமேற்கு மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் அடையாளமாக ஜயவிக்கிரம என்ற நாமம் அமைந்தது.

அவர் 1941 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி குருநாகல் மாவட்டத்தின் சத்கோரளை கட்டுவெல்லேகம மற்றும் கிரிஉல்ல என்பவற்றில் வசித்த பௌலிஸ் பெரேரா மற்றும் சோமா பெரேரா தம்பதிக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். 1968 இல் அவர் தீவிர அரசியலில் குதித்தார்.

1977 ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் இடதுசாரி கோட்டையாக இருந்த கட்டுகம்பொல தொகுதியில் அதிகூடிய வாக்குகளான 23,475 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

1977 ஆம் ஆண்டு குருநாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி முதன்முறையாக பாராளுமன்றத்திற்குத் தெரிவான இவர், 1994 முதல் 2020 வரை நடைபெற்ற அனைத்து பொதுத்தேர்தல்களிலும் போட்டியிட்டு 08 ஆவது பாராளுமன்ற அமர்வு வரை தொடர்ச்சியாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றார்.

2001 டிசம்பர் 2003 நவம்பர் மாதம் வரை நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சராகவும், 2015 ஜனவரி முதல் 2005 ஓகஸ்ட் வரை உணவுப் பாதுகாப்பு அமைச்சராகவும், 2015 செப்டம்பர் முதல் 2018 பெப்ரவரி வரை நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சராகவும் அவர் பணியாற்றினார். 2017 ஓகஸ்ட் முதல் 2018 ஒக்டோபர் வரை புத்த சாசன அமைச்சராக மக்களுக்கு சேவையாற்றிய அவரை, மக்கள் இன்றும் மிகுந்த அன்புடனும் இதயப்பூர்வமான மரியாதையுடனும் நினைவுகூருகிறார்கள்.

பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்த அவர், எந்த அமைச்சராக இருந்தாலும் தனது சேவையை இயன்றவரை சிறப்பாக மேற்கொண்டு நாட்டுத் தலைவர்களால் பாராட்டப்பட்டிருக்கிறார். புத்தசாசன அமைச்சின் 'புத்தபுட் சுரக்ஷா' காப்புறுதித் திட்டத்தின் ஊடாக பிக்குமார்களும் அவர்களின் பெற்றோர்களும் விலைமதிப்பற்ற நன்மைகளைப் பெற்றனர்.

2013ஆம் ஆண்டு வரை ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளராகக் கடமையாற்றிய காமினி ஜயவிக்கிரம பெரேரா, கட்சிக்காக பெரும் சேவையாற்றியுள்ளார். வெற்றி தோல்வியை கண்டு அவர் ஒருபோதும் கட்சியை விட்டு விலகவில்லை.



சவால்கள் எழுகின்ற போதெல்லாம் கட்சித் தலைமையுடன் கலந்துரையாடி பிரச்சினைகளைத் தீர்ப்பது அவரது பழக்கமாக இருந்தது. பாராளுமன்றத்தில் சிறந்த பேச்சாளராக திகழ்ந்த அவர், ஐ.தே. கட்சியுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்களில் முக்கிய பங்காற்றினார்.

இளம் பாராளுமன்ற உறுப்பினராக, ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவின் உள்ளத்தைக் கவர்ந்த இவர் சிறந்த திறமைசாலியாக இருந்தார். கொழும்பு நாலந்தா கல்லூரியில் பயின்ற அவர் தனது பாடசாலை நாட்களில் திறமையான துடுப்பாட்ட வீரராக இருந்தார். கல்லூரியின் முதல்தர கிரிக்கெட் அணியில் உறுப்பினராக இருந்த அவர், 1960 ஆம் ஆண்டு அணியின் தலைவராக செயற்பட்டார்.

தமது பிரதேசத்தில் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகப் பங்காற்றிய அவர், பல்லாயிரம் தொழில் வல்லுநர்களை உருவாக்கப் பங்காற்றினார்.

அந்நாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் படுகொலையின் பின்னர் டி. பி. விஜேதுங்க நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் ஐ.தே.க தலைவராக நியமிக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்கவுடன் ஜெயவிக்ரம பெரேரா நம்பிக்கையான உறவைப் பேணி வந்தார். கட்சித் தலைமைத்துவத்தை ரணில் விக்கிரமசிங்க ஏற்ற காலப்பகுதியில், ஐ.தே.க பெருமளவு நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொண்டிருந்தது. ரணசிங்க பிரேமதாச, காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத்முதலி மற்றும் கட்சியின் முக்கிய தலைவர்கள் புலிகளினால் கொல்லப்பட்டனர். இந்தக் கடினமான காலகட்டத்தில் நிபந்தனையற்ற வகையில் கட்சியைக் கட்டியெழுப்ப ரணில் விக்கிரமசிங்கவுடன் பல தியாகங்களைச் செய்த நம்பகமான அரசியல் தலைவர்களில் முன்னணியில் இருந்தவர் ஜயவிக்கிரம பெரேரா.

1994ஆம் ஆண்டில் ஐ.தே.கவை படிப்படியாக மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கையில் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. வெளியில் இருந்து வந்த சவால்களை விட கட்சிக்குள் இருந்து வந்த சவால்களை சமாளிக்க அதிக நேரத்தையும் உழைப்பையும் செலவிட வேண்டியிருந்தது. அந்தச் சந்தர்ப்பங்களின் போதெல்லாம் தலைமைத்துவத்திற்கு அசைக்க முடியாத சக்தியாக இருந்தார் இவர்.

இளம் பாராளுமன்ற உறுப்பினராக அவர் கட்டுகம்பொல தொகுதிக்கு ஆற்றிய அளப்பரிய சேவை என்றும் மறக்க முடியாதவை.

வடமேல் மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகளின் கீழ் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தார். வடமேல் மாகாணத்திற்கு புதிய கருத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தி, வடமேற்கு ஜனகலா கேந்திரத்தை நிறுவி, பாரம்பரிய கைவினை மற்றும் கலாச்சாரத்திற்கு அவர் ஆற்றிய சேவை மகத்தானது. வடமேல் மாகாணத்தில் மரநடுகை நிகழ்ச்சிகளின் மூலம் வீதிகளின் இருபுறமும் நடப்பட்ட மரங்கள் தற்போது வீதியின் இருபுறமும் நிழல் கொடுத்து வருகின்றன.

மரமுந்திரி கிராமங்கள், மாம்பழக் கிராமங்கள் மற்றும் ஆடு வளர்ப்புக் கிராமங்கள் உள்ளிட்ட திட்டங்களை பின்தங்கிய கிராமங்களில் இவர் ஆரம்பித்ததோடு இன்றும் அந்த கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்வாதார வழிகளாக மாறியுள்ளன.

வடமேல் கைத்தொழில் சேவைப் பணியகம் காமினி ஜயவிக்ரம பெரேராவினால்தான் நிறுவப்பட்டது. வடமேல் மாகாண மக்களுக்கு உண்மையாக சேவையாற்றிய ஒரு முன்மாதிரியான தலைவரான காமினி ஜயவிக்ரம பெரேரா காணப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சி எனும் பாரிய விருட்சத்தின் ஊடாக தனது கட்சி உறுப்பினர்களுக்கு அடைக்கலம் கொடுத்த ஜயவிக்கிரம பெரேரா எனும் நாமம் என்றும் அழியாது.



**அகில விராஜ் காரியவசம்**
(ஐக்கிய தேசிய கட்சி உபதலைவர் மற்றும் முன்னாள் அமைச்சர்)

# களுத்துறையில் மாணவர்கள் நலன் கருதி Skills Sri lanka - 2024 கண்காட்சிப் பட்டறை

கல்வி மற்றும் உயர்கல்வி கண்காட்சிப் பட்டறை (Skills Sri lanka 2024) களுத்துறை மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. கல்வி அமைச்சு, திறன் அபிவிருத்தி தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் பிரிவு, களுத்துறை திறன் அபிவிருத்திப் பிரிவு, களுத்துறை, பேருவளை பிரதேச செயலகங்கள் ஏற்பாடு செய்திருந்த மேற்படி கல்விக் கண்காட்சி களுத்துறை மாவட்ட செயலக புதிய கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இவ்வருடம் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள், தற்போது உயர்கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டுச் சென்ற மாணவர்களை இலக்காகக் கொண்டு இந்த கல்விக்கண்காட்சி வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

எதிர்கால உலகத்தின் இலக்குகளை வெற்றிகொள்வதற்கு கிரமமான மற்றும் முறையான நிறுவனங்களில் தொழிற்கல்வி தகைமை பெற்றுக்கொள்ளும் முக்கியத்துவம் தொடர்பில் மாவட்ட செயலாளர் ஜீ.பி ரசன்னகுமார கருத்துரை நிகழ்த்தி மேற்படி வேலைத்திட்டத்தின் நோக்கம் சம்பந்தமாக விளக்கமளித்தார்.





களுத்துறை கல்வி வலய பாடசாலைகளின் மாணவர்கள் பட்டறையில் கலந்து கொண்டதுடன் அரசசார்பற்ற பல்வேறு பல்கலைக்கழகங்களும் இந்த வேலைத்திட்டத்தில் பங்களிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது. களுத்துறை மாவட்ட திறன் அபிவிருத்தி அலுவலர், களுத்துறை மற்றும் பேருவளை பிரதேச செயலக திறன் அபிவிருத்தி அதிகாரிகள் இந்த வேலைத் திட்டத்தின் இணைப்பாளர்களாக செயல்பட்டனர். இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் சதுரிகா கஜநாயக, future lanka development foundation பணிப்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# ஊவா மாகாண சபை உத்தியோகத்தர்கள் பங்கேற்கும் விளையாட்டுப் போட்டிகள்

ஊவா மாகாண விளையாட்டு அமைச்சும், விளையாட்டுத் திணைக்களமும் ஏற்பாடு செய்த 2024 ஊவா மாகாண பொது சேவை விளையாட்டு விழா கடந்த 13 ஆம் திகதி பதுளை கால்பந்து மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 29 ஆம் திகதி விளையாட்டுவிழாவின் நிறைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

ஊவா மாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளர் நிஹால் குணரத்னவின் ஆலோசனையின் பேரில் மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் டி.எம்.கே.எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வுகள் ஊவா மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) டபிள்யூ.எம். ஆர். ரஞ்சித் மற்றும் அதிகாரிகள் தலைமையில் ஆரம்பமாகின .






இப்போட்டிகளில் ஊவா மாகாண சபையின் அமைச்சு மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். அதேவேளை கலாசார திணைக்கள ஊழியர்களின் நடனம், அரச உத்தியோகத்தர்களின் கலை, கலாசர நிகழ்வுகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**எம்.ஏ.எம்.ஹசனார்...**
(ஊவா சுழற்சி நிருபர்)

# அட்டாளைச்சேனை நலன்புரி அமைப்பு ஏற்பாட்டில் கௌரவிப்பு விழா

அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்திற்குள் புதிதாக அதிபர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டவர்கள், அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் மற்றும் ஓய்வு பெறவுள்ளவர்கள் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனை நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த இவ்விருது வழங்கும் நிகழ்வு லொய்ட்ஸ் வரவேற்பு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமையன்று இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் புதிதாக அதிபர்களாக உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளவர்கள், கடந்த காலங்களில் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள், அதிபர் சேவையில் இருந்து விரைவில் ஓய்வு பெறவுள்ள அதிபர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வானது அட்டாளைச்சேனை நலன்புரி அமைப்பின் தலைவர் எம். ஜே.எம்.அன்வர் நௌஷாத் தலைமையில் இடம்பெற்றிருந்தது.





மேற்படி விருது வழங்கும் நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரீஸ், பைஷால் காசீம் ஆகியோருடன் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பை மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ. கே. அமீர், முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவரும் சட்டத்தரணியுமான எஸ்.எம்.ஏ. கபூர் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், பிரமுகர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

**றிசாத் ஏ. காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# பின்தங்கிய பிரதேச பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் அரசாங்கம் கூடுதல் கவனம்

## இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன்

**(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)**

பின்தங்கிய பிரதேச பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கல்லடி சக்தி வித்தியாலயத்தின் கற்றல் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் வேலைத்திட்டத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கென புதிய வகுப்பறைக்கட்டடமும் வைபவ ரீதியாக இதன் போது திறந்து வைக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பின்தங்கிய பிரதேச கல்வி அபிவிருத்தியில் அரசாங்கம் கூடுதல் கரிசனை காட்டி வருகிறது. அந்த வகையில் இப்பிரதேச பாடசாலையின் கல்வி போதனையை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததை





நினைத்து மகிழ்ச்சியடைகின்றேன். காலத்தின் தேவைக்கருதி கிழக்கு மாகாணத்திற்கும் இந்திய அரசாங்கம் கல்வி, அபிவிருத்தி உட்பட ஏனைய உதவிகளை வழங்குவதற்கு முன்வர வேண்டும். இதேபோல் இப்பாடசாலையில் ஆங்கிலப்பாடம் மற்றும் கணினி அறிவு என்பவற்றில் முன்னேற்றமடைய தான் நடவடிக்கை எடுத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நிர்வாக பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி ஷாமினி ரவி, திட்டமிடல் பிரதி பணிப்பாளர் திருமதி கரண்யா சுபாகரன், இராமகிருஷ்ண மிஷன் முகாமையாளர் சுராச்சி சானந்தா மகராஜ், மாணவர் சங்கம் ,பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கல்வி தரத்தை உயர்த்துவதற்கு பாடுபட்ட இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் பிரதேச பெற்றோர் அபிவிருத்தி சங்கத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மலர்மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.

அறுகம்பை பிரதேசத்தில்

# சுற்றுலா விடுதிகளில் திடீர் சுற்றிவளைப்பு

**(ஒலுவில் விசேட நிருபர்)**

பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் உரிய சுகாதார சட்டவிதிகளை பின்பற்ற தவறிய சுற்றுலா விடுதிகள், உணவகங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் உவைஸ் பாரூக் தெரிவித்தார்.

சுற்றுலா விடுதிகளில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது நுகர்வுக்கு பொருத்தமில்லாத உணவுப்பண்டங்கள், விற்பனைக்காக வைக்கப்படிருந்த காலவதியான குளிர்பானங்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் விற்பனையாளர்களுக்கு கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில் பாவனைக்குதவாத உணவுப்பண்டங்கள், பொருட்கள், காலவதியான பொருட்கள் என்பன கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அதன் உரிமையாளருக்கெதிராக உணவு பாதுகாப்பு சட்டத்திட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள் என்பன மூடப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

## கிழக்கின் குரல்

பிராண்டிக்ஸ் நிறுவனத்தால்

# 55 பாடசாலைகளுக்கு smart board வழங்கிவைப்பு



**(கிண்ணியா தினகரன்,கிண்ணியா மத்திய நிருபர்கள்)**

பாடசாலை மாணவர்களின் கல்வி திறனை மேம்படுத்தும் நோக்கில் பிராண்டிக்ஸ் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 55 பாடசாலைகளுக்கு smart board நேற்று (19 ) வழங்கி வைக்கப்பட்டது.

*Brandix* ஆடைத்தொழிற்சாலையின் ஒத்துழைப்புடன் கிராமப்புற பாடசாலைகளுக்கு smart board வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நற்பிட்டிமுனை முஸ்லிம்களின் வாழ்வியலும் வரலாறும் நூல் வெளியீடு

**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**

நற்பிட்டிமுனை முஸ்லிம்களின் வாழ்வியலும் வரலாறும் எனும் நூல் வெளியீட்டு விழா கல்முனை ஆசாத் பிளாசா வரவேற்பு மண்டபத்தில் நூலாக்க குழுவின் தலைவரும் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான அஷ்ஷெய்க் ஏ.எல்.நாசர்கனி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நற்பிட்டிமுனை வெளியீட்டுப் பணியகத்தினால் வெளியீட்டு வைக்கப்பட்ட இந்த வரலாற்று நூலின் முதல் பிரதியை நூலாக்க குழுவின் தலைவர் மற்றும் நூலின் பிரதம நூலாசிரியர் ஓய்வுபெற்ற



நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.அஸிஸூல்லாஹ் ஆகியோர் இணைந்து நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் ரவூப் ஹக்கீமுக்கு வழங்கி வைத்தனர்.

நூல் பற்றிய ஆய்வுரையை இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா நிகழ்த்தினார். நிகழ்விலே கௌரவ அதிதிகளாக கலந்து கொண்ட முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், கல்முனை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ், பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா ஆகியோர் விசேட உரைகளை நிகழ்த்த நற்பிட்டிமுனை முஸ்லிம்களின் வாழ்வியலும் வரலாறும் நூல் பற்றிய சிறப்புரையினை பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் நிகழ்த்தினார்.

# போதைப்பொருள் விழிப்புணர்வுக் கூட்டம்

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் குற்றச் செயல்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுக்கூட்டம் மாலை கல்முனை இருதயநாதர் மண்டபத்தில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் சமூக மட்டத்திலுள்ள பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர்.

கல்முனை பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரி எம். ரம்சீன் பக்கீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியும் விசேட அதிதியாக கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி) கே.எம்.லசந்த புத்திகவும் கலந்து சிறப்பித்தனர். இக்கலந்துரையாடலில் பிரதேச சமூக பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனை, சிவில் குற்றங்கள், முரண்பாடு, குடும்ப பிரச்சினைகள் போன்ற பல்வேறுபட்ட தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடப்பட்டன.

மேலும் இக்கலந்துரையாடலில் போதைப்பொருளின் தாக்கங்கள் , போதைப்பொருள் பாவனையை தடுப்பது எவ்வாறு, போதைப்பொருள் பொருளாதாரத்தை எவ்வாறு சீரழிக்கின்றது உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் அதிதிகள் உரை நிகழ்த்தினர்.

இக்கலந்துரையாடலில் பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச்செயலாளர் எம். ஐ.எம் ஜிப்ரி (எல்.எல்.பி) உட்பட பொலிஸ் ஆலோசனை குழு உறுப்பினர்கள் மற்றும் மதகுருமார்கள், அதிபர்கள், மாணவர்கள், அரசஉத்தியோகத்தர்கள், விளையாட்டுக்கழகங்கள், வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகன சாரதிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

**(பாறுக் ஷிஹான்)**

# சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்கு உதவி கோரல்

சாய்ந்தமருது 13, 183/1, அல்ஹிலால் வீதியைச் சேர்ந்த ஆதம்பாவா சித்தி சிஹானா (845134553v) என்பவரின் இரு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவருக்கு 4 வயதுடைய பெண் குழந்தையும் மற்றும் கல்வி கற்கும் 12 வயதுடைய பெண் குழந்தையும் இருக்கின்றனர். இந்நோய் நிலைமை காரணமாக குழந்தைகளை பராமரிப்பதில் மிகவும் சிரமப்பட்டு வருகின்றார்.

இவருக்கு அவசரமாக சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை செய்யுமாறும் அதற்காக 80 இலட்சம் ரூபா பணம் செலவாகுமெனவும் பரிந்துரை செய்துள்ளார். எனினும் மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த அவரது குடும்பத்தினரால் இந்நிதியை திரட்ட முடியாததால் பரோபகாரிகளின் உதவியை குடும்பத்தினர் நாடுகின்றனர்.

உதவவிரும்புவோர் *A. Sithy Sihana*, கணக்கிலக்கம் 338200360006399, மக்கள் வங்கி, சாய்ந்தமருது என்ற வங்கி இலக்கத்துக்கு வைப்பிலிடுமாறும் மேலதிக விபரங்களுக்கு 0768848415, 0752136492 என்ற தொலைபேசி இலக்கங்களை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

# தீபச்செல்வன் எழுதிய பயங்கரவாதி நாவல் அறிமுக விழா



**(அன்புவழிபுரம் தினகரன், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்)**

ஈழ எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய பயங்கரவாதி நாவல் அறிமுகவிழா அண்மையில் (17) திருகோணமலை நகரசபை பொதுநூலக கேட்போர் கூடத்தில் கவிஞர் ஓய்வு நிலை அதிபர் க.யோகானந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணிக்கு நூல் ஆசிரியர் தீபச்செல்வன் நூலின் முதற்பிரதியை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.



இராணுவத்தின் 24ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் ஹற்றன் நெசனல் வங்கியின் அனுசரணையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட 500 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் மற்றும் பாடசாலை பைகள் வழங்கப்படும் நிகழ்வு அம்பாறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இராணுவத்தின் 24 வது படைப்பிவின் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

**(படம்: மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

# சாரணர் மாணவர்களை வழியனுப்பும் நிகழ்வு



**(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)**

திருகோணமலை கோணேஸ்வரா இந்து கல்லூரி மைதானத்தில் நாளை புதன்கிழமை (21) பத்தாவது சாரணர் ஜம்போரி இடம்பெறவுள்ளது.

இதில் அக்கரைப்பற்று, கல்முனை சாரணர் சங்க கிளைகளிலிருந்து சாரணர்கள் மற்றும் சாரண ஆசிரியர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இவர்களுடன், மாவட்ட ஆணையாளர் எம்.ஐ உதுமாலெவ்வை உள்ளிட்ட பலரும் செல்கின்றனர். இவர்களுக்கு, இஸ்காப் மற்றும் ரீ சேட்கள் வழங்கி வழியனுப்பும் நிகழ்வு நேற்று மாவட்ட ஆணையாளர் எம்.ஐ உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்றது.

## மலைச்சாரல்

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு காலத்துக்கு ஏற்ற வகையில் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்



பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தற்போதைய பொருளாதார நிலைமைகளை கருத்திற் கொண்டு சம்பள உயர்வை அமுல்படுத்துமாறு பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். மடுல்சீமை பகுதியில் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர்கள் சங்கத்தின் புதிய காரியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்ட கம்பனிகள் மனிதாபிமானமற்ற முறையிலோ தான்தோன்றிதனமாகவோ செயற்படுவதற்கு நாங்கள் ஒன்றும் அடிமைகள் அல்ல. ஆகவே ஜனாதிபதியும் தொழில் அமைச்சும் தொழிற்சங்களும் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

சில காலம் அவகாசம் கம்பனிகளுக்கு கொடுக்கப்பட்டு இன்று 3 வருடமாகிவிட்டது. வாழ்க்கை செலவுக்கு ஏற்ற வகையிலேயே ஏனைய துறைகளுக்கு சம்பளம் உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்கள் காலம் காலமாக சம்பள உயர்வுக்காக எதிர்ப்பார்த்து கொண்டிருப்பதும் பல கசப்பான சம்பவங்களுக்கு பிறகே சம்பள உயர்வு வழங்கப்பட்டு வருகின்றது. ஆகவே கம்பனிகளுக்கு உத்தரவு விட்டு உடனடியாக காலத்துக்கு ஏற்ப சம்பள உயர்வை பெற்றுத் தாருங்கள்.

கடந்த காலங்களில் மண்சரிவு அபாயம் ஏற்படும் போது பசறை, மீதும்பிபிட்டி, லுணுகலை பழைய தொழில் சாலை பிரிவு மக்கள், மடுல் சீமை டூமோ மக்கள், ஊவாக்கலை பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அருகிலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்படுவதும் அரசியல்வாதிகள் அவ்விடத்திற்கு சென்று வாக்குறுதிகள் வழங்கி செல்வதும் வழமையாகயிருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான பாரத் - லங்கா 10,000 வீடமைப்புத்திட்டம் ஆரம்பம்







இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மலையகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள பாரத் - லங்கா தனி வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று காலை நடைபெற்றது.

மலையகத்தில் 45 தோட்டப்பகுதிகளில் நிர்மாணிக்கப்படவுள்ள 10 ஆயிரம் தனிவீட்டுத் திட்டத்தில் முதற்கட்டமாக 1300 தனிவீடுகள் அமைக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாரத பிரதமர் நரேந்திரமோடி ஆகியோரின் வழிகாட்டலின் பேரில் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா ஆகியோரின் நேரடி கண்காணிப்பில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தோட்டப்பகுதிகளில் பாரத் - லங்கா தனி வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் நடைபெற்றன. நுவரெலியா மாவட்டத்தில் பீற்று தோட்டப்பகுதியான ஸ்கிராப் தோட்டம்,வலப்பனை மஹாவுவா தோட்டம், அக்கரப்பத்தனை,பூன்டுலோயா பேஹரம் தோட்டம்,வெஸ்ட்வாடோ தோட்டம் ஆகியவற்றில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மக்கள் பிரதிநிதிகள்,தோட்ட அதிகாரிகள்,தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள்,தோட்ட பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன்போது தனி வீட்டுக்கான அடிக்கல் நாட்டப்பட்ட தோட்டங்களில் வீடு கட்ட தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மத அனுஷ்டானங்கள்,விசேட பூஜைகள் மற்றும் வேலைத்திட்ட பதாதை திரைநீக்கமும் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



கலாநிதி ஏ. எம்.ஏ. அஸீஸ் அவர்கள் தமிழ் முஸ்லிம் சமூகத்திற்கு தலைமை தாங்கக்கூடிய அடையாளங்களைக் கொண்டு விளங்கியவர் என்று சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை வாழ்நாள் பேராசிரியர் எம்.சொர்ணராஜா தெரிவித்தார்.

கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் நினைவேந்தல் வைபவம் கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு சாஹிரா கல்லூரி, கஃபூர் மண்டபத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை வை.எம். எம்.ஏ. பேரவையின் முன்னாள் கூறியுள்ளார். அந்த மூன்று வருட காலம்தான் அவர் மனதில் அதிகம் கருத்துக்கள் பதிந்த காலம் என்று குறிப்பிட்டுள்ளார். அதன் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றார். அப்பொழுது அங்கு தமிழிலும் சைவ சமயத்திலும் மிகுந்த ஈடுபாடுடையவராக இருந்தார்.

அல் குர்ஆனையும் ஓதிப் படித்துக் கொண்டு இந்து சமயத்தையும் படித்தார். அக்காலத்தில் ஒரு போட்டியில் இந்து சமய பரிசினையும் பெற்றவர். ஆனால் அவர் முஸ்லிம் என்றபடியால் அந்தப் பரிசு அவருக்கு வழங்கப்படவில்லை. அது தவறான காரியம். அப்பரிசு அவருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அவருடைய மகனின் கூற்றின்படி அவர் டுள்ளார். அவருடை உரைகளை கேட்டுள்ளேன். அவர் மூன்று இடங்களில் மரண தண்டனைக்கு தனது கருத்துக்களை எடுத்துரைக்கின்றார். மரண தண்டனை மனித வாழ்வுக்கு ஏற்புடையதல்ல என்று சொல்லியிருக்கின்றார். அந்த தண்டனை முற்றாக அழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை அவர் 1954 ஆம் ஆண்டு முதல் சொல்லியிருந்தார்.

இலஞ்சம் பெறுதல் தொடர்பிலான விடயங்களுக்கு சட்டங்கள் இயற்ற முயற்சித்தார். அதற்கு அந்தக் காலத்தில் எதிர்ப்பு இருந்தது. அந்தக் கருத்து அப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் தற்போதைய இலஞ்ச ஊழல்கள் இடம் பெற்றிருக்காது. அவர் சிங்கள சட்டத்திற்கு எதிரான கருத்துக்களை முன் வைத்திருந்தார்.

அவர் நீண்ட பேச்சுக்களை செனட் வழங்கியிருக்கின்றார். ஞானசார தேரருக்கு மன்னிப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே இந்த மன்னிப்புக்களெல்லாம் சட்டத்திற்குப் புறம்பானவை என்று குறிப்பிடலாம்.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் மொழிப் பிரச்சினையாகும். 1956 ஆம் ஆண்டில் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களும் கூறியிருந்தார். மொழிப் பிரச்சினை நாட்டுக்கு இறுதியில் பங்கம் விளைவிக்கும் என்றும் அதில் பொருளாதார ரீதியாக பங்கம் விளைக்கும் என்று அன்று அஸீஸ் கூறியிருந்தார். அந்தக் கருத்து தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது.

# இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் உரையாற்றும் போது;

# இலங்கையின் சிறுபான்மை இனங்களுக்கு சிறந்த தலைமைத்துவம் வழங்கியவர் 'ஏ.எம்.ஏ. அஸீஸ்'

## அஸீஸ் நினைவு தின நிகழ்வில் சிங்கப்பூர் பேராசிரியர் எம். சொர்ணராஜா தெரிவிப்பு















தலைவர் காலித் எம். பாரூக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'இலங்கை முஸ்லிம் தமிழ்த் தலைவர் செனட்டர் அஸீஸின் சட்டமும் அதன் நிகழ்கால முக்கியத்துவமும்' என்ற தலைப்பில் விசேட பேச்சாளராகக் கலந்து கொண்ட சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை வாழ்நாள் பேராசிரியர் எம். சொர்ணராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கெப்டன் ஏ.ஜி.ஏ. பாரி, கொழும்பு டைம்ஸின் எம்.சி ஆசிரியர் ரசூல்தீன் வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட். முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி ஆகியோர் பங்கேற்றனர்.

இதில் முன்னாள் அமைச்சர் ஏ. எச்.எம். பௌசி, தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, பேராசிரியர் சிவகேசரம், வைத்தியர் பரீட் உள்ளிட்ட பெரு எண்ணிக்கையிலான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் எழுதிய கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸின் நினைவுப் பேருரையின் ஆங்கில நூல் வெளியீடும், தேசமானிய எம்.டி. டி பீரிஸ் எழுதிய 'இலங்கையில் சிங்கள முஸ்லிம் உறவு', பேராசிரியர் எம். சொர்ண ராஜாவின் 'அஸீஸின் முஸ்லிம் தமிழ் தலைமைத்துவம்' எனும் நூல் வெளியீட்டு விழாவும், காப்பியக்கோ கதிரோன், முனைவர் முகைதீன் அனஸ் எழுதிய அறிஞர் அகம் நிறை காவியம் எனும் மூன்று நூல்களின் வெளியீட்டு வைபவமும் இடம்பெற்றது.

கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள், யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் 1911 ஆம் ஆண்டில் பிறந்தவர். அங்கே வளர்ந்தார். அவருடைய ஆரம்ப பாடசாலை முஹம்மதிய்யாக் கல்லூரியாகும். அவர் 10 வயது முதல் 13 வயது வரையிலும் இராமகிருஸ்ணன் வைதீஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்றார். அவர் அங்கு கல்வி பயிலும் போது சைவ சமயத்தில் மிகுந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். அவரது மகளின் கட்டுரையில் அங்கு கல்வி கற்கும் போது அக்கால கட்டத்தில் தான் அவர் சிந்தனையில் எழுச்சி பூர்வமான கருத்துக்களும் மற்றும் இலக்கிய ஆர்வம் ஏற்பட்டன என்று அவர் ஒவ்வொரு நாளும் தினசரி வானொலியில் இந்து சமய பத்திப் பாடல்களை தொடர்ந்து கேட்டு வந்ததாகக் கூறினார். அதேபோன்று இஸ்லாத்திலும் ஆழமான பற்றும் அறிவும் இருந்தது. அவர் இஸ்லாமியர் என்றாலும் அவருக்கு சைவ சமயத்திலும் புலமை இருந்தது.

ஆனபடியால்தான் அவர் பிற்காலத்தில் தமிழில் நிறைய எழுதியிருக்கிறார். இந்தியாவில் வழங்கப்படும் சாஹித்திய அகடமி விருது அவர் தமிழில் எழுதிய நூலுக்கு கிடைத்தது. அந்த நூலின் பெயர் இஸ்லாமும் இலங்கையும் என்ற நூலாகும். தமிழ் ஆர்வம் உடையவராக தன் வாழ்நாள் முழுக்க இருந்துள்ளார். அதற்குச் சான்றாக ஏ.எம். நஹியா என்ற ஒருவர் அஸீஸும் தமிழும் என்ற நூல் எழுதியுள்ளார். அதில் அவர் தமிழ் இலக்கியத்திற்கு அளித்த பங்குகளைப் பற்றிக் கூறியிருக்கிறார். அரபு மொழியினை தமிழில் எழுதுகின்ற விடயத்திலும் அவர் புலமை பெற்றிருந்தார். அந்த அரபுப் பாசை இப்போது பலராலும் பேசப்படுவதில்லை. அந்தக் காலத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் பேசப்பட்ட மொழியாகும். அவர் தமிழ் முஸ்லிம் உறவுக்குப் பாலமாக இருந்தவர் என்பதற்கப்பால் தமிழ், முஸ்லிம்களுக்கு ஒரு தலைவர் என்றே அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும்.

கிறிஸ்வத தமிழ் தலைவர்கள் இருப்பதைப் போல முஸ்லிம்களிடத்திலும் தமிழ் தலைவர் இருக்க வேண்டும். கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் அப்படியான தலைவர் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அவர் மட்டக்களப்பில் அரச நிர்வாக அதிகாரியாக இருக்கும் போது அங்குள்ள முஸ்லிம்களுக்கு உதவியதைப் போன்று தமிழ் மக்களுக்கு பல உதவிகள் செய்துள்ளார். இராமகிருஸ்ணன், விபுலானந்த அடிகளுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் விபுலானந்த அடிகளார் சிவானந்தா கல்லூரியின் அதிபராக இருந்தார். அவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ் பேராசிரியராக வந்தார். அவர் பத்து வருட காலம் செனடராக இருந்தார். அந்தப் பத்து வருட காலத்தில் அக்காலத்தில் அரசியலில் மிக ஆழமான பதிவுகளையிட்டில் பதிவு செய்து வைத்துள்ளார். இந்த சட்டத்திற்கு எதிராக வாக்களித்தார். முஸ்லிம் சமுதாயம் அந்தச் சட்டத்தை ஆமோதித்துக் கொண்டது. ஏனென்றால் அதிகமாக முஸ்லிம்கள் சிங்கள மக்களுடன்தான் வாழ்கின்றார்கள். ஆனபடியால் அந்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு முதலில் காட்டவில்லை. ஆனால் அஸீஸ் அவர்கள் அதை சிலவேளைகளில் எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று கூறியிருந்தார். அந்த வகையில் கடைசியாக முஸ்லிம் அஸோசியஸின் ஆமோதித்தலுடன் அதற்கு எதிராக வாக்களித்தார்.

அவர் செனட்டில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாகத்தான் நியமனம் பெற்றிருந்தார். அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சி இருக்கும் வரைக்கும் பெரிய சவால்கள் எவையும் ஏற்படவில்லை. எஸ்.டப்லியூ. ஆர். டி பண்டாரநாயக்கவின் ஆட்சி வந்த பின்னர் அவர் எதிர்க்கட்சியில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் எதிர்க் கட்சியில் இருந்த போதுதான் சிங்கள சட்டத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தார்.

அவர் மரண தண்டனைக்கு எதிர்த்து உரையாற்றினார். அந்த மரண தண்டனை சட்டத்திற்கு உட்பட்டுத்தான் முன்னர் இருந்தது. இப்பொழுது அரசாங்க ஊழியர்களால் நடத்தப்படும் கொலைகள் பொறுப்புகள் எடுக்கப்பட வில்லை. சில தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை ஜனாதிபதியின் அதிகாரத்தின் மூலம் தண்டனைகளை பொது மன்னிப்பின் மூலம் விடுதலை செய்து விடுகின்றார். தற்போது உச்ச நீதிமன்றம் அந்த தண்டனையை ரத்துச் செய்தது. அந்த மன்னிப்பு வழங்குதல் முறை சட்ட முறைகளைப் பின்பற்றப்படுவதில்லை. இப்படியான பல மன்னிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக ரத்நாயக என்பவர் இவர் எட்டு மனிதப் படுகொலைகளை நடத்தியவர். அவருக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டு இருக்கிறது. ஜயமான என்பவருக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிப்பு

அகில இலங்கை வை. எம்.எம்.ஏ. பேரவையின் ஸ்தாபகத் தலைவரின் நினைவுப் பேருரையினை 1975 ஆம் ஆண்டு மாவட்ட நீதவான் எம்.ஐ. எம்.ஹுஸைன் அவர்களும், எஸ். எம். கமால்தீன் ஆகிய இருவரும் இணைந்து நடத்தினர். அதனைத் தொடர்ந்து கலாநிதி பவுண்டேசன் இந்த நினைவுப் பேருரைகளை நடத்தி வருகின்றன. அதற்கு ஆதரவாக அகில இலங்கை வை. எம். எம்.ஏ. பேரவை செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை வாழ்நாள் பேராசிரியர் என். சொர்ணராஜ் அவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டமையையிட்டு நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் பல்லின சமூகங்களுக்கிடையே கொண்டுள்ள நட்புறவுகள் மற்றும் அவருடைய செயற்பாடுகள் குறித்து மீளவும் மீட்டிப் பார்க்கவும் அதன் மூலம் எமது நாட்டிலுள்ள பல்லின சமூகங்களுக்கிடையே நல்லுறவை வலுப்படுத்தவும் இந்நிகழ்வு ஓர் எடுத்துக்காட்டாக அமையும் என்றார்.

**கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியர் எம். சி. ரசூல்டீன் உரையாற்றும் போது;**

கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் ஒரு கல்விமானாகவும், அரசியல் வாதியாகவும், சமூக சேவையாளராகவும் மிளிர்ந்தவர். அவர் கொழும்பு சாஹிராவின் அதிபராக இருக்கும்போது ஒரு முன்னணிமிக்கப் பாடசாலையாக ஸாஹிராவை மாற்றியமைக்க வேண்டும் என்ற நிலையில் செயற்பட்டார். அதனை அவர் காலத்தில் சாதித்தும் காட்டினார். நான் கொழும்பு சாஹிராவில் கல்வி கற்றேன். 10 வருடம் காலம் அவர் அதிபராக இருந்தார். அது ஒரு பொன்னான காலம் என்று சொல்லாம். அவர் இருந்து விட்டு வெளியே செல்லும் போது எவ்வாறு வீழ்ச்சி நிலையை திடீரென எதிர் நோக்கியது என்பதை என்னால் அவதானிக்க முடியாது.

அவர் 1961 இறுதி டிசம்பர் பகுதியில் வெளியே சென்றார். அது ஒரு தனியார் பாடசாலையாகும். அப்பாடசாலையினை அரசாங்கம் தனியார் மயப்படுத்தினர். தனியார் மயப்படுத்தியமை அஸீஸ் அவர்களுக்கு பிடிக்கவில்லை. இப்பாடசாலையில் மிகப் பிரமாண்டமான உள்ளக கிரிக்கெட் விளையாட்டு அரங்கு இருந்தது. அப்பொழுது அங்கு விளையாடுவதற்காக பிரதமர் டட்லி சேனாநாயக போன்ற பெரியார்கள் வருவார்கள். அப்பொழுது எங்களுக்கு வயது 10, 11 இருக்கும். நாங்களும் விளையாடுவோம்.

அஸீஸ் அவர்கள் என் வாழ்க்கையோடு ஒன்றித்துப் பயணம் செய்தவர். நான் அங்கு கல்வி கற்றதன் காரணமாக மாளிகாவத்தை தாருஸ்லாம் கல்லூரியில் 10 வருடம் அதிபராக கடமையாற்றினேன். அங்கு என்னோடு படித்த நண்பர்களையும் உப அதிபராகவும் இணைத்துக் கொண்டேன். இப்பாடசாலையில் சிறிய கட்டிடத்தில் 50 பிள்ளைகள் தான் கல்வி கற்றார்கள். அதனை விரிவுபடுத்தி 1000க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் கல்வி கற்கக் கூடியதாக தரம் உயர்த்தினேன்.

வை.எம்.எம். ஏ. கிளைகள் நாடளாவிய ரிதியில் இயங்கின. அவற்றை ஒருங்கிணைத்து அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையாக மாற்றம் பெறச் செய்தார். ஒரு தாய்ச் சங்கமாக உருவாக்கி அஸீஸ் தலைவராகவும் லாபீர் காசிம் செயலாளராக இருந்தார் எனத்தெரிவித்தார்.

**அகில இலங்கை வை. எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட் எம்.ரிஸ்மி உரை–யாற்றும் போது;**

கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் முஸ்லிம், தமிழர்களுக்கும் தலை மைத்துவம் வழங்கினார் என்ற சொற்பதத்தை இன்று பரந்துபட்ட நோக்கில் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அவர் தமிழ் பேராசிரியர்களுடன் கொண்டுள்ள நட்புறவும் அவருடைய நல்ல பழக்கவழக்கங்கள் எடுத்தியம்புகின்றன. பேராசிரியர் சுவாமி விபுலானந்தருடன் அவர் மிகுந்த நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். அவர் அரச நிர்வாக சேவையில் இருந்து அரசியல் சேவைக்கு வந்தார்.

சமூக சேவைக்கு ஓர் உந்து சக்தியாகத் திகழ்ந்தார். இங்கு முன் வைக்கப்பட்ட கருத்துக்களை எங்களது மனங்களிலும் தோள்களிலும் சுமந்து கொண்டு இந்த நாட்டின் மறுமலர்ச்சிக்காக செயற்பட வேண்டும். ஏ. எம். நஹியா அவர்கள் அஸீஸும் தமிழும் என்ற நூலை எமக்கு தந்துள்ளார். அவர் பற்றிய விரிவான விளக்கங்கள் அதில் உள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இக்பால் அலி





துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்**

# விலைமனுக்கோரல் (IFB)

## பெயர்ச்சியியல் போக்குவரத்து (LOGISTICS) சேவை வழங்கல்

1. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் கொள்முதல் குழுவின் தலைவரினால் பின்வரும் சேவைகளுக்காக உள்ளூர் சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.

2. கொள்முதல் முறையானது LCB முறைமையாகும்.
விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| கொள்முதல் இலக்கம் | கொள்முதலின் பெயர் | ஆவணக்கட்டணம் (VAT உள்ளடங்கிய) | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| Procurement No: CSC/LOG/PAC/2024/2025(Packing) | Packing & Transportation of Packed Cargo | ரூ. 1,180.00 | 04/03/2024 1030 மணி |
| Procurement No: CSC/LOG/CYF/2024/2025(Yard Facility) | Container Yard Facility for Cargo Stuffing, de-stuffing & Storage | ரூ. 1,180.00 | 04/03/2024 1430 மணி |
| Procurement No: CSC/LOG/FUM /2024/2025(Fumigation) | Fumigation of Containerized Cargo/LCL Cargo/Air Cargo | ரூ. 1,180.00 | 04/03/2024 1430 மணி |
| Procurement No: CSC/LOG/INS/2024/2025(Insurance) | Cargo Insurance | ரூ. 1,180.00 | 04/03/2024 1430 மணி |
| Procurement No: CSC/ LOG /TRS/2024/2025(Transportation) | Transportation of FCL Containers/ Empty Containers/ LCL Cargo & Air Cargo | ரூ. 1,180.00 | 04/03/2024 1430 மணி |

3. தொடர்புடைய கொள்முதல் ஆவணத் தொகுப்பினை வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் பெயர்ச்சியியல் போக்குவரத்துப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

4. கொள்முதல் ஆவணங்களை **2024.02.21** ஆம் திகதி முதல் **2024.03.01** ஆம் திகதி வரை நிறுவனத்தின் கடிதத்தலைப்பேட்டிலான கோரிக்கைக் கடிதம் ஒன்றின் மூலம் மீள்ச் செலுத்த முடியாத கொள்முதல் கட்டணம் **ரூ.1,180/- இனை (18% VAT உட்பட)** செலுத்தி அலுவலக நேரத்தில் (08.30 மணிமுதல் -16.30 மணிநேரம் வரை) இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் பெயர்ச்சியியல் போக்குவரத்துப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

5. முத்திரையிடப்பட்ட அனைத்து கொள்முதல்களும் குறித்த நேரத்திற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ள கொள்முதல் பெட்டியில் இடல் வேண்டும்.

**தவிசாளர்,**
**கொள்முதல் குழு,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்,**
**இல : 27, MICH கட்டடம், சேர் ராஷிக் பரீட் மாவத்தை (பிறிஸ்ரல் வீதி),**
**கொழும்பு 01.**

**மேலதிக விபரங்களுக்கு - தொ.பே. 011-2328772/3 , விரிவு : 300**
**பெக்ஸ் இல : 011-2449486**
**இணையம் : www.cscl.lk**

SELACINE

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

**முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு**

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

LSC

# விலைமனுக்கோரல்

## (50 கிலோ) பாலிப்ரொப்பிலீன் பைகள் Polypropylene Bags (50Kg) 480,000 வழங்குவதற்கான தேசிய போட்டிமுறையிலான விலைமனுக்கோரல் (PR 12321)

வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் (DPC தலைவரினால் செவனகல சீனி தொழிற்சாலைகளுக்கு (50 கிலோ) 480,000 பாலிப்ரொப்பிலீன் பைகள் **Polypropylene Bags (50Kg)** வழங்குவதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத **ரூ.16,250.00** கட்டணத்தை பணமாக செலுத்தி **2024 மார்ச் 11** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **09.00 மணி முதல் 15.00** மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும். கட்டணம் பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

2. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.

3. விலைமனுக்களை **2024 மார்ச் 12** ஆம் திகதி இலங்கை நிலையான நேரப்படி **14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"(50 கிலோ) பாலிப்ரொப்பிலீன் பைகள் Polypropylene Bags (50Kg) வழங்குவதற்கான விலைமனுக்கோரல்"** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

4. அனைத்து மனுக்களுக்கும் **2024 மார்ச் 12** ஆம் திகதி முதல் **119 நாட்களுக்கு** செல்லுபடியாகும். **ரூ.790,000.00 (ஏழு இலட்சத்தி தொண்ணூறாயிரம்) மனுப்பாதுகாப்புடன்** சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். **தொலைபேசி : +94 11 258 4184 கையடக்க தொலைபேசி : +94 77 010 3359, தொலைநகல் : +94 11 2 50 0674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk)**

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04.**

SELACINE

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz Classified

Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted

For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax- 011 2 429 375 - 011 2 429 380 / E-mail- classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

---

# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| புறபொருட்கள் மற்றும் துணைப்பொருட்களுடனான கணனிகளை வழங்கல் |
| நிழற்படப்பிரதியாக்கல் இயந்திரங்களின் (3 எண்ணிக்கையானவைகள்) வழங்கல் |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.02.20 ஆம் திகதியிலிருந்து 2024.02.26 வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் இணைய பக்கத்தை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைமனுக்கோரல்

## வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக மூலப்பொருட்களை வழங்கல்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிட்டம்புவ நிர்வாக பொறியியலாளர் பிரிவிற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

   **RDA/GAM/CE/TEN/2024/11 -** இரத்தம்பலே, குடும்பி கடுவ வீதியை அபிவிருத்தி செய்வதற்கான Grade 30 (19mm) Ready - mix Concrete வழங்கல்

2. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.
   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
   வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு,**
**தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.**
**தொ.பே 033-2221020 / 033-2226752**

SELACINE

---

## பெயர் மாற்றம்

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் பொத்துவில் பி/16ல் வசித்துவரும் இராஜேந்திரன் கிறோசன் ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை இராஜேந்திரன் முகம்மது சம்ஹான் எனமாற்றிக் கொண்டேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**இராஜேந்திரன் முகம்மது சம்ஹான்**

Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

* Trusted Marketplace of Classified Advertisers...
Sunday Observer adz Classified
Call : 077 7 278 948/ 011 2 429 347/ 011 2 429 383/ 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk

---

## பிழை திருத்தம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல் – 2024

**சுதேச மருத்துவ மாகாண திணைக்களம் - கி.மா.**

**மூலப் பொருட்கள் மற்றும் உணவை வழங்குவதற்கான பெறுகை**

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ மாகாண திணைக்களத்திற்கு பின்வரும் பண்டங்கள் வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

மேற்படி தலைப்பில் கடந்த 2024.02.12 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் அட்டவணை கீழ்க்காணுமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும். அத்துடன் பந்தி 5 இலுள்ள திகதியானது 2024 பெப்ரவரி 13 ஆம் திகதியிலிருந்து 2024 மார்ச் 01 ஆம் திகதி வரையும் என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

| இல. | பெறுகைத் தலைப்பு | இடம் | தொடர்பு இல. | விலைமனுப் பிணை (ரூபாவில்) | மீளளிக்கப்படாத தொகை (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| 01. | கிழக்கு மாகாணத்தில் ஆயுர்வேத மருந்துகளுக்கு மூலப்பொருட்களை வழங்கல் | டிஎம்ய்யு கப்பல்துறை<br>டிஎம்ய்யு சத்துருக்கொண்டான்<br>டிஎம்ய்யு அக்கரைப்பற்று | EP/ IM/ FMU4/ RM/ 2024-04 | 70,000.00 | 2,000.00 |
| 02. | உணவு (பார்சல்) வழங்கல் | மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை - தெய்யத்தக்கண்டிய - அம்பாறை | EP/ IM/ FMU4/ DS/ DE/ 2024-05 | 75,000.00 | 2,000.00 |
| | | மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை கிண்ணியா - திருகோணமலை | EP/ IM/ FMU4/ DS/ K1/ 2024-06 | 65,000.00 | 2,000.00 |
| | | கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை, வேரகெதட்டகொட்ட - அம்பாறை | EP/ IM/ FMU4/ DS/ WE/ 2024-07 | 50,000.00 | 2,000.00 |
| 03 | உணவிற்காக மளிகை பொருட்களை வழங்கல் | ஆயுர்வேத தள வைத்தியசாலை, கப்பல்துறை, திருகோணமலை | EP/ IM/ FMU/ 4/ GS/ KA/ 2024/-08 | 150,000.00 | 2,000.00 |
| | | மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை கோபாலபுரம் - நிலாவெளி - திருகோணமலை | EP/ IM/ FMU4/ GS/ GO/ 2024-09 | 65,000.00 | 2,000.00 |

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**மருத்துவ கலாநிதி (திருமதி) ஜே.பாஸ்கரன்**
**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல் மட்டம்).**
**சுதேச மருத்துவ மாகாண திணைக்களம், கி.மா.**
**இல.: 198, உட்துறைமுக வீதி, திருகோணமலை.**

**தொலைபேசி: 026-2223996/026-2225993**
**மின்னஞ்சல்: impdep9@gmail.com**

---

# INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

## MARITIMEPATTU PRADESHIYA SABHA

### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **grant** from the **European Union** towards the cost of **Local Development Support Project,** and intends to apply part of the proceeds of this **grant** to payments under the Contract for Work as described below.

2. The **Chairman, Provincial Project Procurement Committee (PPPC)** on behalf of the **Maritimepattu Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work as described below

| No. | Contract No. | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn.) | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs.) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
